When only
The best is
Good Enough



Buy
Solide Pumps

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர் 5: பிரமோதூத ஆு வைகாசி மீ 14 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால் பிறை 3 (28-05-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 97

ஹமீத், முப்படைத் தளபதிகள் வடக்கே வருகிறார்கள்

# புலிகள் - அரசு இன்று இரண்டு கட்டப் பேச்சு!

## யாழ்ப்பாணத்திலும் பலாலியிலும் நடக்கும்

யாழ்ப்பாணம், மே 28

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான உயர்மட்டப் பேச்சுக்கள் தொடர்ந்து இன்று வடக்கில் இரண்டு கட்டங்களாக நடைபெறும்.

அரசியல் நிலவரங்கள் குறித்து யாழ்ப்பாணத்தில் காலையிலும்-பின்னர் பலாலியில் பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து நண்பகலிலும்-இரண்டு கட்டங்களாகப் பேச்சுக்கள் நடைபெறும்-

இந்தப் பேச்சுக்களில் பங்கு பற்றுவதற்காக வடக்கு, கிழக்கு மாகாணச் சமாதானக் குழுவின் தலைவரும், நீதி அமைச்சருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் இன்று காலை 9 மணிக்கு பலாலி வந்துசேருவார். அவருடன் கூட முப்படைகளின் தளபதிகளும் பலாலி வருவார்கள்.

காலையில் பலாலி வந்து சேரும் அமைச்சர் ஹமீத்தை விடுதலைப்புலிகள் தமது பாதுகாப்புடன் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வருவர்.

யாழ்ப்பாணத்தில் பெயர் குறிப்பிடப்படாத ஓரிடத்தில் அமைச்சர் ஹமீத் விடுதலைப்புலிகளின் உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமிமகேந்திரராஜா (மாத்தயா), செயலாளர் நாயகம் திரு. யோசரட்ணம் யோகி, ஆலோசகர் டாக்டர்

[5ஆம் பக்கம் பார்க்க]

## சுப நேரம்

28-5-90
திங்கட்கிழமை வைகாசி 14
சுபநேரம்:
11.52 -01. 22
இராகுகாலம்
07·22 - 08 52

## முச்சந்தி முரளி



வீரத்தாய்கள் மலிந்த சங்க காலத் தமிழகம் ஈழத்தில் மறுபிறப்பு எடுத்திருக்கு தெண்டெல்லே வெளிநாட்டுத் தமிழர்சள் சொல்லுகினம் ... ...!

## அச்சுவேலி நேற்று சோகமயம்

அச்சுவேலி, மே 28

சுகயீனம் காரணமாக யாழ். ஆஸ்பத்திரியில் சனிக்கிழமை மரணம் அடைந்த வீரவேங்கை வில்வரத்தினம் ஜெயரத்தினத்தின் (நிசாந்தன்) இறுதிச் சடங்குகள் நேற்று கதிரிப்பாயில் இடம் பெற்றன.

இவரின் மரணத்தை அடுத்து அச்சுவேலி, பத்தமேனி, இடைக்காடு ஆகிய பகுதிகளில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. வர்த்தக நிலையங்கள்

(5 ஆம் பக்கம் பார்க்க]

## 170 பேர் நேற்று விடுதலை

கொழும்பு, மே 28

ஜே. வி. பி. இயக்க சந்தேக நபர்களில் 170 பேர் நேற்றுக் காலை விடுதலை செய்யப்பட்டனர்.

காலியில் வைத்து கேர்ணல் விஜயசேகரா இவர்களை விடுதலை செய்தார். (இ-2-3)

## மீண்டும் வேலை நிறுத்தம்

கொழும்பு, மே 28

ஒரு லட்சம் மலையகத் தொழிலாளர்களை நாடு கடத்துவதைக் கண்டித்து நுவரெலியாவில் உள்ள ''குயின்பேரி'' தோட்டத்தில் நேற்று முதல் சுமார் ,1500 தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர்

நேற்றுக் காலை முதல் ஆரம்பித்த இந்த வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறும் என்று தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-2-3)

6ஆவது திருத்தப் பிரேரணை:

## அரசு கொண்டு வந்தால் ஈரோஸ் விலகிக் கொள்ளும்

ஆறாவது திருத்தத்தை ரத்துச் செய்யும் சட்ட மூலத்தை அரசாங்கம் கொண்டு வருமானால் அது தொடர்பான பிரேரணையை ஈழவர் ஜனநாயக முன்னணி விலக்கிக் கொள்ளும்.

ஈழவர் ஜனநாயக முன்னணி எம். பி. திரு. சி இரத்தின ராஜா கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜூன் மாதம் 5ஆம் திகதி ஆறாவது திருத்தத்தை ரத்துச் செய்யும் பிரேரணையை ஈழவர் ஜனநாயக முன்னணி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தனிநபர் சட்டமூலம் தயாராகி விட்டது என்று திரு. இரத்தினராஜா சொன்னார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அனைத்து எதிர்க்கட்சி எம் பிக்களின் அபிப்பிராயத்தையும் ஈ. ஜ. மு. பெறும் என்றும் திரு. இரத்தினராஜா சொன்னார். (இ-எ)

வடக்கு - கிழக்கு கடலில்

## அத்துமீறும் படகுகளை கைப்பற்றுமாறு பணிப்பு

### மீறினால் சுடவும் உத்தரவு

வடக்கு-கிழக்கு கடற் பிரதேச எல்லைக்குள் படகுகள் நுழைந்தால் தடுத்துக் கைப்பற்றும் படியும் —

உத்தரவை மீறிச் செல்லும் படகுகள் மீது சுடும்படியும் கடற்படைக்குப் பாதுகாப்பு அமைச்சு உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை தொடக்கம் இந்த உத்தரவு அமுலுக்கு வந்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்து மீன்பிடிப்பதைத் தடுக்கும் பொருட்டும் —

அக்கரையிலிருந்து ஆயுதம் சடத்துவதைத் தடுக்கவுமே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களில் பேசப்பட்டது.

இந்த உத்தரவின் மூலம் இந்தியாவில் இருந்து படகுகள் இலங்கை வருவதையும் இலங்கையில் இருந்து இந்தியாவுக்குப் படகுகள் செல்வதையும் தடுக்க முடியும் எனவும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-2)

## அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்த வேண்டாம்!

### படையினருக்கு மேலிடம் பணிப்பு

கொழும்பு, மே 28

''வடக்கு -கிழக்கு மாகாணங்களில் உள்ள ஆயுதப் படையினர் அமைதிக்குப் பங்கம் ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும்'' என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இராணுவ உயர் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

'' அதே நேரம் விழிப்பாகவும் இருக்க வேண்டும்'' என்றும் தமிழ்ப் பகுதியில் உள்ள படையினருக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-2)

## வவுனியா, திருமலைக்கு துருப்புக்கள் விரைவு

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்களப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களைப் பாதுகாக்க வவுனியாவுக்கு நான்கு '' கஜபாகு றெஜிமென்ட்'' துருப்புக்களும், திருகோணமலைக்கு மூன்று ''சிங்க றெஜிமென்ட்'' துருப்புகளும் நேற்று முன் தினம் அனுப்பப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியாவிலும், திருகோணமலையிலும் குறிப்பிடத்தக்க அளவு சிங்கள மக்கள் வாழ்கிறார்கள்.

அவர்கள் தொல்லைகளை அனுபவிப்பதைத் தவிர்க்கு முகமாகவும்-

அவர்கள் அச்சத்துடன் வாழ்வதை தவிர்த்துப் பாதுகாப்பு அளிக்கு முகமாகவுமே-சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு இராணுவ 'றெஜிமென்டுகள்' அனுப்பப்பட்டதாக இராணுவஅதிகாரி ஒருவர் தெரிவித்தார். [அ-2,-3]

## கல்முனையில் ராணுவ வீரர்கள் இருவர் நேற்று கடத்தப்பட்டனர்

கொழும்பு, மே 28

கல்முனையில் வைத்து இரண்டு இராணுவ வீரர்கள் நேற்றுக் காலை கடத்தப்பட்டார்கள்.

அம்பாறையில் இருந்து வேலை முடிந்து அவர்கள் வீடு திரும்பும் வழியில் கல்முனையில் வைத்து கடத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது,

செய்தி எழுதப் படும்வரை அவர்கள் விடுதலை செய்யப் படவில்லை. (இ-2,3)

## யாழ். செயலகத்திற்கு பொது சன தொடர்பு அதிகாரி

யாழ் - செயலக பொது சனத் தொடர்பு அதிகாரியாக திரு. எஸ். ஐ. நித்தியராஜ் இன்று பதவி ஏற்கிறார்.

பொதுசனத் தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட வேண்டிய அவசியத்தை யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் உயர் அதிகாரிகளிடம் வற்புறுத்தி வந்ததை அடுத்து பொது நிர்வாகத் துறை அமைச்சால் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் இவர் புனர்வாழ்வுத்துறை உதவி அரசாங்க அதிபராகவும், மோட்டார் திணைக்கள உதவி ஆணையாளராகவும் கடமையாற்றுவார்.

நிர்வாக சேவைத் தரத்தை சேர்ந்த இவர் யாழ் - கூட்டுறவு உதவி ஆணையாளராகக் கடமையாற்றிவந்தார். (இ-3)

வடக்கு - கிழக்கு புனரமைப்பு;

## அரசு சார்பற்ற நிறுவனம் மூலம் உதவ வெளிநாடுகள் விருப்பம்

யாழ்ப்பாணம், மே 28

வடக்கு - கிழக்கு மாகாண புனரமைப்பு வேலைகளுக்கு உதவிகள் வழங்கிவரும் வெளிநாட்டு நிறுவனங்கள் அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக வழங்க விருப்பம் தெரிவித்துள்ளன.

இந்த இரு மாகாணங்களிலும் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு வேலைகளுக்கு வெளிநாட்டு அரசுகளும், உதவி வழங்கும் நிறுவனங்களும் புனர்வாழ்வு அமைச்சு மூலம் நிதிஉதவிகளை வழங்கி வந்தன.

இந்த உதவிகள் சரியான முறையில் புனரமைப்புவேலைகளுக்கு சென்றடைவதில்லை என்றும், அபிவிருத்தி வேலைகள் முறையாக நடைபெறுவதில்லை என்றும் அந்த அமைப்புக்களுக்கு புகார்கள் கிடைத்ததை அடுத்து புனர்வாழ்வு அமைச்சுக்கு நிதிவழங்க அந்த அமைப்புகள் தயக்கம் காட்டி

(5ஆம் பக்கம் பார்க்க]

## மாலைதீவில் கைதிகளாக இருக்கும் 68 இலங்கையரை விடுவிக்க முயற்சி

கொழும்பு, மே 28

மாலைதீவில் 1988 நவம்பரில் இடம்பெற்ற சதி முயற்சியில் ஈடுபட்டதற்காக சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட 68 இலங்கையரை விடுவிப்பது தொடர்பான கோரிக்கையை இலங்கை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

புளொட் இயக்கத்தின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி இது சம்பந்தமான கோரிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளது.

மாலைதீவு சதி முயற்சியில் ஈடுபட்ட 68 பேரில் 12 பேருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை பின்னர் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்

[5ஆம் பக்கம் பார்க்க]

## பெண்களும் ஆயுதம் தரித்து சரிசமமாகப் போராடுகிறார்கள்

### மகளிர் முன்னணி மாநாட்டில் மாத்தயா பெருமிதம்

யாழ்ப்பாணம், மே 28

'' தமிழீழப் பெண்கள் இன்று விடுதலைப் போராட்டக் களத்தில் குதித்திருக்கிறார்கள். மகளிர் படைப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு பெண்கள் ஆயுதம் தரித்து ஆண்களுடன் சரிசமமாகப் போராடும் அளவிற்கு எமது போராட்டத்தில் புரட்சிகரமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. மகேந்திரராசா (மாத்தயா) நேற்று யாழ், வின்சர் தியேட்டர்மண்டபத்தில் நடைபெற்ற விடுதலைப்புலிகள் மகளிர் முன்



னணியின் யாப்பு உருவாக்க மாநாட்டில் உரைநிகழ்த்தும் போது குறிப்பிட்டார்.

மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கும் இம் மாநாட்டிற்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்குழு உறுப்பினரும் முன்னணியின் உப-செயலாளருமான செல்வி. சுந்தரி தலைமைவகித்தார்.

திரு. மாத்தயா தமது பேச்சில் மேலும் குறிப்பிட்டதாவது:-

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு முக்கியமானது. பெண்கள் முழுமையாகப் பங்களிக்

[5ஆம் பக்கம் பார்க்க]

யார் கொண்டுவந்தாலும்

## ஆறாவது திருத்த நீக்கம்; எதிர்ப்பது இனத்துரோகம்

### ரெலோ எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, மே 28

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கும் பிரேரணையை யார் கொண்டுவந்தாலும் அதனை எந்தத் தமிழனும் எதிர்க்க மாட்டான்; எதிர்க்கவும் கூடாது.எதிர்த்து வாக்களிப்பது தமிழினத்துக்குச் செய்யும் துரோகமாகும்.

இப்படிக் கூறினார் ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த எம். பி. திரு. திவ்வியநாதன்.

ஆறாவது திருத்த நீக்கம் குறித்து அவர் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

இது நான் கூறும் கருத்து; ரெலோ கூறும் கருத்தல்ல. இதுபற்றி கட்சி கூடி முடிவு எடுக்கும்.

''தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட சில அமைப்புக்களைச் சேர்ந்தவர்களை துரோகிகள் பட்டியலில் புலிகள் சேர்த்துள்ளனர். அதே நேரம் ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்க எமது பலம் தேவையென்பதை உணருகிறார்கள்''.

இந்தத் திருத்தத்தை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுபங்கு ஆதரவு வேண்டும். அந்த ஆறாவது சரத்துக்குக் கீழ் நாடாளுமன்றம் வந்தவர்கள் துரோகிகளாக இருந்தபோதும், அவர்கள் ஆதரவு தேவை என்பதை புலிகள் உணர்ந்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி வங்கிக்கிளை யாழ்.பிரதேசத்துடன் இணைப்பு

இதுவரை வன்னிப்பிரதேசத்துடன் இணைக்கப்பட்டிருந்த இலங்கை வங்கியின் கிளிநொச்சிக் கிளை யாழ் - பிரதேச அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

யாழ் - பிரதேச முகாமையாளர் திரு. கே. கணேசமூர்த்தியின் மேற்பார்வையிலேயே இந்தக் கிளை இனி இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## நோயாளரைப் பராமரிக்க வைத்தியசாலை உதவியாளர்

யாழ்ப்பாணம், மே 28

ஆள்உதவியில்லாத நோயாளர்களை பராமரிக்க வைத்தியசாலைகள் தோறும் வைத்தியசாலை உதவியாளர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள்.

அரசாங்க வைத்தியசாலைகளில் வைத்திய அதிகாரிகள், நலன்புரிச் சங்க அதிகாரிகள் பொறுப்பில் இவர்கள் கடமையாற்றுவார்கள்.

ஆள் உதவியின்றி வைத்தியசாலைகளில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்படும் நோயாளர்களைப் பராமரிக்க இவர்கள் நியமிக்கப்பட இருக்கின்றனர்.

முதலில்ஆண், பெண்களாக 50 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஒரு மாத காலம் பயிற்சி அளிக்கப்பட்டு ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் வைத்தியசாலைகளில் நியமிக்கப்பட இருக்கிறார்கள்.

ஒருநோயாளியை வீடுகளில் வைத்துப்பராமரிக்கவும் இவர்கள் சேவை கிடைக்கும்.

இவர்களுக்கான பயிற்சிகளையும், அதன்பின் இவர்கள் சேவை பற்றியும் செஞ்சிலுவைச் சங்கம் மேற்பார்வை செய்யும். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த [Crimson Globe] பீட்ரூட் விதை, விவசாய ஆய்வுகூட அனுமதி பெற்றது. ஊர் விளைச்சல் தரவல்லது விற்பனைக்கு உண்டு பிள்ளையார், 259' காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3490)

900-20, 8-25-20, 600-16, 700-15 அளவுகளில் A M S ரீ - கப், ரயர்களும் பாவித்த ரயர்களும் எம்மிடம் நியாயமான விலைகளில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- (1) ரயர் கவுஸ், மானிப்பாய் (2) ஆதி ரயர் கவுஸ், பருத்தித்துறை றோட், நெல்லியடி (3721)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் மீசாலை மத்திய வீதியில் நல்ல தண்ணீருடன் கூடிய 45 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். தொழிற்சாலை அமைப்பதற்கும் உகந்தது. தொடர்பு:- அ. உமா சங்கர், 19, நல்லூர் குறுக்குத் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (3712)

### திருமணஅழைப்பு கார்ட்டுகள்

புதிய அச்சடிக்கும் திருமணக்காட்டுகள் சகலடிசைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய. ஸ்ரீகாந்த்-புத்தகசாலை மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (C/5033)

### கோழிக்குஞ்சுவிநியோகம்

ஒரு மாத Hylineவெள்ளை சிவப்பு, கறுப்பு, பேட்டுக் குஞ்சுகள் (தடுப்பூசி போடப்பட்டது) விற்பனைக்குண்டு சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி, லேன். கொக்குவில் [3499]

### FOR SALE

For Immediate Sale at cost price brand new Olympus Microcassette Recorder with 4 Cassettes and Psion Oreganisea II, Model cm. 257, Arasady Road, Kandarmadam Jaffna. (3715)

### தேவை

நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப் பெட்டி [Deep Freezer] தேவை. விலை விபரம் கொள்ளளவு போன்ற விபரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்க தா. சுந்தராஜா, கச்சாய் றோட், 4ஆம் வீதி சாவகச்சேரி. (3708)

பேக்கரி பாண், கேக், ஐசிங் வேலைகள் தெரிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். சுபாஸ் கபே, 176, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3716)

### நெசவாளர் தேவை

கைத்தறியில் நெசவு செய்ய அனுபவமுள்ள பெண்கள் தேவை. ஆண்களும் தோற்றலாம். சாப்பாடு, தங்குமிட வசதியுடன் நல்ல சம்பளமும் வழங்கப்படும். ''ஏலிம்'' சிறுவர் இல்லம், மெமோறியல் ஒழுங்கை, மானிப்பாய். [3492]

### வாடகைக்கு

சிங்கப்பூர், இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய தலை நகை சோடனை செற் எம்மிடம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு ராசி சில்க்ஸ். 70, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம். [சி/4559]

### A/L மாணவர்களே!

ஏப்ரல் மாத பொருளியல் நோக்கு (அரசியல் மற்றும் பொருளாதாரம்) வர்த்தக உலகம் சஞ்சிகைகள் விற்பனையாகிறது. ஸ்ரீகாந் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், No- 165, யாழ்ப்பாணம். சி/4587)

### தவறி விட்டது

27-05-90 ஞாயிறு அன்று யாழ் / பெரிய ஆஸ்பத்திரியில் முருசேசு மாலதி என்பவருடைய க.பொ.த (சா/த) க.பொ.த [உ/த] சான்றிதழ்களும் பிறப்பத்தாட்சிப் பத்திரமும் கொண்ட கவர் தவறி விட்டது. எடுத்தவர்கள் தயவு கூர்ந்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (3720)

கஸ்தூரியார் வீதி, தட்டாதெரு சந்தி, K.K.S வீதி, 8 ஆம் கட்டை அளவெட்டிக்கு இடையில் 70 போஸ்ட்காட் அளவு படங்கள் தவறி விட்டன. கண்டெடுப்பவர்கள் தயவு செய்து S. நடராசா, 31, பிள்ளையார் ஸ்ரோர்ஸ், மானிப்பாய், யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [3719]

### மணமகன் தேவை

யாழ் நகர் கல்லூரியில் ஆசிரியையாக பணிபுரியும் 28 வயதான யாழ் இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த ஆசிரியைக்கு அரசாங்க உத்தியோக மணமகன் தேவை. 129, மே/பா, உதயன். [13256]

### தச்சு வேலைப் பயிற்சி

ஆனைக்கோட்டை முள்ளி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரால் இப்பகுதியில் வேலையற்றிருக்கும் படித்த இளைஞர்களுக்குதச்சு வேலை பயிற்சி வழங்கப்படஉள்ளது.

முள்ளி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும் யாழ்ப்பாணம் மெதடிஸ்த திருச்சபையும் இணைந்துஉலக தரிசனத்தின் உதவியுடன் இப்பயிற்சி நெறியை வழங்கவுள்ளன

ஆனைக்கோட்டை கிராமத்தை சேர்ந்த 15 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் இப் பயிற்சி நெறியில் சேரலாம்.

ஒரு வருடகாலத்துக்கு நடாத்தப்படும் இப்பயிற்சி நெறியில் சேர்ந்துகொள்ளும் இளைஞர்களுக்கு பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் நானூறு ரூபாவழங்கப்படும் (இ-90)

---

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வி

### ★ தனுசா செல்வரெட்ணம் ★

சந்தரோடை மடத்தடியைச் சேர்ந்த செல்வரெட்ணம் ஜெய்வதனி தம்பதிகளின் செல்வப்புதல்வி தனுசா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (28-05-80) மிக விமர்சையாகக் கொண்டாடுகின்றார் இவரை பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென அப்பா, அம்மா, அக்காமார், கிரிஜா, டயனா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் வாழ்த்துகின்றனர்.

(13291)

---

## சாயிபாபா தரிசனமும், தென்னிந்திய புனித ஸ்தல யாத்திரையும்!

பக்த அன்பர்களே,

தென்னிந்தியாவிலுள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்கள், தீர்த்தங்கள், பறவைகள் சரணாலயம், மிருகக்காட்சிச்சாலைகள், நந்தவனங்கள், அரசமாளிகைகள், இயற்கை வனங்கள் உட்பட சத்திய சாயிபாபா தரிசனமும் கூடிய இச்சுற்றுலாவில் தமிழ் நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய தென்னிந்திய மாநிலத்தில் 20 நாட்கள் தங்கள் கவலைகளை மறந்து ஆண்டவனைத் தரிசிக்க உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

குறிப்பு:- போக்குவரத்து, தங்குமிட வசதி, சைவச்சாப்பாடு அனைத்தும் எங்கள் செலவிலேயே செய்து கொடுக்கப்படும். இவை அனைத்துக்கும் நீங்கள் நினைத்துப் பார்க்க முடியாத சாதாரண தொகையே அறவிடப்படும்.

மேலும் ஒரு முறைக்கு ஆகக்கூடியது 33 யாத்திரிகர்கள் மட்டுமே அழைத்துச் செல்லப்படுவார்கள் என்பதையும், சாப்பாடுகள் அனைத்தும் அனுபவம் வாய்ந்த பிராமணர்களைக் கொண்டு தயார் செய்து கொடுக்கப்படும் என்பதையும் கவனத்தில் கொள்க.

பிரயாணங்கள் யாவற்றுக்கும் நவீன சாய்வு வசதி ஆசனங்களைக் கொண்ட வீடியோ பொருத்தப்பட்ட புதிய பஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏமாற்றத்தை தவிர்த்துக் கொள்ளத் தயவு செய்து யாத்திரீகர்கள் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்க:

இத்துடன் சகல நாடுகளுக்குமான விமான டிக்கட், இந்தியன் விசா ஆகியனவும் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

N. V. YOHANATHAN
**QUICK TRAVELS**
U. G. 117, Peoples Park Complex,
Colombo-11,
Sri Lanka.

[3657]

---

## விவசாயிகளே!

## வெங்காயப் பயிரில் களைகளின் தாக்கமா?

# கோல் 2 ஈ

★ போட்டி இட்டு வளரும் சகல களைகளையும் விதைகள் முளைக்க முன் அழிக்கவல்லது.

★ இரண்டு மாதங்களுக்கு மேல் களைகளில் இருந்து பாதுகாப்பு

★ பரந்த செயற்பாடுடைய ஒரே களை நாசினி

விவசாய இரசாயனங்கள் அபாயகரமானவை அவதானமாகக் கையாளவும்.

CIC **கெமிக்கல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிட்டெட்**

த. பெ. எண் 352, கொழும்பு.

---

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில்: | | ஆண்டவன் அடியில்: |
|---|---|---|
| 31 |  | 28 |
| 04 | | 05 |
| 1962 | | 1989 |

செல்வன்

### தொன்பிலிப்பு தேவதாசன்

(அசோக்)

புல்லினையும் நோகவைக்கா பூமனத்து செல்வமே!
புல்லியர்தம் வன்செயலால் பொன்னுடலும் காணலையே
சொல்லி ஆற்றவொணா சோகத்துக் காளானோம்
நல்லிறைவன் பொன்னடியில் நாடி உறங்குவையோ
கள்ளமிலா நல்லவனே கண்ணீரில் விட்டாயே
வெள்ளமெனப் பொங்கிவரும் வெந்துயருக்காளானோம்
முள்ளாய் நின்நினைவு முடியாதுறுத்தும் எமை
உள்ளவரை உன் நினைவு உள்ளத்தால் நீங்காதே!

உமது ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

அன்புத் தந்தை, சகோதரர், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனியர், மருமக்கள், மாமன்மார், மாமியர், உற்றார், உறவினர், நண்பர்களோடு —

தலைமன்னார் பியர் சலூன்,
செம்மண்தீவு பியூட்டி சலூன்,
மன்னார் பியூட்டி சலூன்.
**தொழில் நிலையங்கள்.**

செபஸ்தியார் கோவில் பின் வீதி,
மன்னார். (13159)

---

## இளி / பூநகரி மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க

## வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல் - 1990

மேற்படி பொதுக்கூட்டம் 08 - 06 - 1990 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்களைத் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்.
(13162)

---

உ

## வாழ்த்துகிறோம்!

சுன்னாகம், மயிலணி, திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாதஸ்வாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று ஆரம்பமாகிறது.

தினமும் மாலை 5 30 மணிமுதல் 6 30 மணி வரை புகழ் பெற்ற சமயப் பெரியார்களின் சொற்பொழிவுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மேற்படி மஹோற்சவம் மிகவும் சிறப்புற நடைபெற எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**Able Technical Studies,**
**Jaffna - Sri Lanka.**
(சி-4603)

---

## Donald Ganeshakumar Trophy

Inviting all Cricket Clubs in the Nothern Province for the Inaugural Limited Fifty Overs Cricket Tournament for,

**The Donald Ganeshakumar Trophy**
Organised by
**The Centralites Sports Club**

Entries close at 5 p.m. on 31st May, 1990
Draw at 4. 30p m, on Friday 1st June 1990
**at Jaffna Central College**

Please Contact:
**Mr. D. Puradchithasan**
233, Stanley Road,
Jaffna.

To Collect your entry forms and Tournament Rules.

General Secretary
**Centralites Sports Club.**
(C-4542)

---

## ஆறாம் மாத நினைவஞ்சலி



திருமதி

### கௌசலாதேவி பரமேஸ்வரன்

மண்ணுலகில் பிரவேசம்; 06 - 07 - 1945
விண்ணுலகப் பயணம்: 28 - 11 - 1989

திதி:-24 - 05 - 1990

மாதங்கள் ஆறு சென்றன-ஆயினும் அம்மா, அம்மா
மனங்கள் ஆறவில்லை- அம்மா, அம்மா
அன்புத்தெய்வம்- அம்மா, அம்மா
அம்மா, அம்மா, அம்மா

கணவன் பிள்ளைகள்
உற்றார், உறவினர் அயலவர்கள்.

678/11, முள்ளி ஒழுங்கை,
கண்டி வீதி அரியாலை,
யாழ்ப்பாணம். (3631)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

மலரன்ன கண்ணாள் அருமை அறியாது
அலரெமக்கு ஈந்ததிவ் வூர்

**பொருள்:**

மலர்போன்ற கண்ணை உடைய இவளுடைய அருமை அறியாமல், இந்த ஊரார் எளியவளாகக் கருதி அலர் கூறி எமக்கு உதவி செய்தனர்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

28 - 05 - 1990 த. பெ இலக்கம் 25

# பரீட்சையும் முடிவுகளும்

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் வெற்றி அளிக்குமா? இருசாராருக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றி வருவதால் மீண்டும் ஒரு யுத்தம் வருமா? அரசாங்கத்தின் அதிபதியான ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா மீது விடுதலைப் புலிகளின் தலைவர்கள் பெரும் நம்பிக்கை வைத்திருந்தார்களே. அதனைக் கெடுக்கும் விதத்தில், அரசு—புலிகள் உறவைப் பாதிக்கும் விதத்தில் அரசு திசை மாறப் பார்ப்பது ஏன்?

இந்தக் கேள்விகள் அரசியலில் அக்கறை உள்ளவர்கள், அரசியல் அவதானிகளை மட்டுமன்றி, சாதாரண தமிழ் மக்களையும் துளைத்துக் கொண்டே இருக்கின்றன.

நான்கு தசாப்தங்களாக இழுத்தடித்தது போல, ஏமாற்றியது போல, தமிழர்களின் உரிமைப் பிரச்சினையை மேலும் நீடித்துக் கொண்டு போகத்தான் தென்னிலங்கை அரசியல்வாதிகள் விரும்புகிறார்களா? திட்டமிடுகிறார்களா? வடக்கு—கிழக்கு அமைதியாக இருந்தால் தான் நாடு அமைதியாக இருக்க முடியும், நாட்டு மக்கள் அமைதியாக வாழமுடியும் என்பதை அனுபவத்தில் கண்ட பின்னரும் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க அவர்கள் தயங்குவது ஏன்?

தமிழர்களின் உரிமைகளை வழங்கக்கூடாது, அவர்களை அடக்கி ஒடுக்கி அதிகாரம் செலுத்த வேண்டும் என்ற பேரினவாதமே அவர்களிடம் நிரந்தரமாக மேலோங்கி நிற்கிறது. அதனை மாற்றுவதோ, அகற்றுவதோ கஷ்டம் — என்று தமிழ் மக்கள் முடிவு செய்யும் விதத்தில் தென்னிலங்கையர்கள் — சிங்களத் தலைவர்கள் தீர்க்கமாக முடிவு எடுத்து விட்டார்களா? அது எப்படியோ

ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசும், தலைவர்களும் காலத்தைக் கடத்தி, தமது பதவிக் காலத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தான் பேச்சுவார்த்தை, ஒப்பந்தம் என்று "பம்மாத்து" புரிகிறார்கள்- அவர்களில் எவரையும் நம்பி மோசம் போவதற்கு இனியும் தயாராகக் கூடாது என்று தமிழர்களும் தீர்க்கமாக முடிவு செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது.

தமிழர்களின் பிரச்சினை சிக்கல் நிறைந்ததாகக் காட்டப்படுகிறதே அன்றி அது அப்படியல்ல. தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆளும் உரிமை. தமது மண்ணின் அலுவல்களை வளர்ச்சியை, முன்னேற்றத்தைத் தாமே நிர்ணயித்துக் கையாளும் உரிமை ஆகிய இரண்டு அம்சங்களே தமிழர் பிரச்சினையின் பிரதான அம்சங்கள். அவை சுயநிர்ணய உரிமை என்ற பெரும் காப்புக்குள் அடங்கும்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வழங்குவதற்குச் சிங்கள மக்கள் தயார் என்பதைக் காட்டும் புள்ளிச் சமிக்ஞை தான் அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குதல் (அதற்குப் பின்னர் பல உரிய, பெரிய காரியங்கள் நடந்தாக வேண்டும்). அதனைச் செய்யவில்லை என்றால் தமிழர் பிரச்சினையை இழுத்தடிக்கத் திட்டமிடப்படுகிறது என்பதே வெளியார்ந்த அர்த்தம்.

எனவே இப்போது ஏற்பட்டுள்ள அமைதிச் சூழ்நிலையைப் பயன்படுத்தி ஆறாவது திருத்தத்தை நீக்கி, நிரந்தரத் தீர்வுக்கான அடிக்கல் நடப்பட வேண்டும். அந்த வகையில் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க தென்னிலங்கையருக்குச் சிறிதேனும் விருப்பம் உண்டா என்ற பரீட்சை தான் ஈழவர் ஜனநாயக முன்னணி கொண்டு வர இருக்கும் தனி நபர் பிரேரணை.

அரசு காலங்கடத்தி, தட்டிக்கழித்துவிட நினைத்தாலும் அரசியல் பரீட்சை நடத்தும் பொறுப்பை ஈ. ஜ. முன்னணி எடுத்துக் கொண்டது பொருத்தமானது. இந்தச் சோதனை வெற்றி அடைகிறதா, தோல்வி காண்கிறதா என்பது தென்னிலங்கை அரசியல் வாதிகளைப் பொறுத்தது. அவர்கள் தீர்க்க தரிசனத்துடன் செயற்படாவிடில் தமிழர்கள் பிரிந்து வாழ்வது என்ற தீர்க்கமான முடிவை மேற்கொள்வதைவிட இடைக்காலத் தீர்வு என்ற தங்குமடம் எதுவும் இன்றி போராட்டத்தைத் தொடர்வதைவிட, வேறு மாற்று மார்க்கம் இருக்க முடியாது.

இப்படி ஒரு தீர்க்கமான, திட்டவட்டமான முடிவை எடுக்க வேண்டும் என்பதில் போராளிகள் குழுக்கள் மட்டும் தான் தீவிரமாக உள்ளன என்று தென்னிலங்கையர் தப்புக்கணக்குப் போட்டுவிடக்கூடாது.

கடந்த 42 வருட அரசியல் படிப்பினைகளின் விளைவாக, தமிழர்களுக்கு எனத் தனிநாடு ஒன்று அமைத்தால் தான் தங்கள் எதிர்காலச் சந்ததியினராவது உரிமை நிறைந்த மக்களாக, பாதுகாப்புப் பொருந்திய மக்களாக நிம்மதியாக வாழ முடியும் என்ற முடிவுக்குத் தமிழ் மக்கள் நிரந்தரமாக வந்துகொண்டிருக்கிறார்கள். இதனை எந்தத் தென்னிலங்கை அரசியல் வாதியும் தமிழ்ப் பகுதிக்கு வந்து மக்களுடன் மேலோட்டமாக உரையாடினாலே இலகுவில் ஊர்ஜிதம் செய்து கொள்ள முடியும்!

எனவே, ஈழவர் ஜனநாயக முன்னணி நாடாளுமன்றத்தில் நடத்தும் பரீட்சை மூலம் சிங்களவர்களின் முடிவு தெரியவரும்; தமிழர்களின் முடிவு தெரிவிக்கப்படும்.

### மட்டக்களப்பு

# நடமாடும் செயலகம் ஜூன் 16 இல்

மட்டக்களப்பு, மே 28

மட்டக்களப்பு வெல்லாவெளி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெற இருந்த நடமாடும் செயலகம் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெறவிருக்கும் வடக்கு கிழக்கு மாகாணசபையின் அமைச்சு செயலாளர் மாநாடு காரணமாகவே நடமாடும் செயலகம் பின் போடப்பட்டுள்ளதாகச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1 ஆம் திகதி நடைபெற இருக்கும் நடமாடும் செயலகத்தில் சுவர்ணபூமி உறுதிகையளிப்பு, காணிப்பர்மிட்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### நிதி உதவி

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கொக்கிளாய்தமிழ்ப் பாடசாலையின் புதிய கட்டடத்திற்கு ஐந்து லட்சம் ரூபாவும் கொக்கிளாய் சிங்களப் பாடசாலைக்கு ஐந்து லட்சம் ரூபாவும், கொக்குதொடுவாய் கனிஷ்ட மகா வித்தியாலய கட்டடத்திற்கு ஒன்பது லட்சம்ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. (க-92)

## சமய நிகழ்ச்சிகளில்

### நாளை மகோற்சவம்

யாழ்ப்பாணம், மே 28

அருள்மிகு சித்தன்கேணிப் பெரியவளவு ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் கோவிலில் வருடாந்த மகோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர் பவனியும், மறுநாள் 8 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (உ)

### மட்டுவில்

மட்டுவில் தெற்கு வேதக்கேணி கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெறும்.

ஜூன் 6 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 7 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (இ-31)

### சக்திபுரம் காளியம்மன் உற்சவம்

யாழ்ப்பாணம், மே 28

ஊரெழு சத்திபுரம்சிவபூரணி காளியம்மன் கோயில் அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை மாலை 4மணிக்கு கொடி ஏற்றும் வைபவத்துடன் ஆரம்பமாகிதொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும்.

எதிர்வரும் 7 ஆம் திகதி 11 ஆம் திருவிழா அன்று காலை 8 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெற்றுஅடியார்களுக்கு பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும் மாலை வழக்கம் போன்று பூசைகள் இடம்பெற்று அம்பாள் சப்பறத்தில் எழுந்தருளும் காட்சி இடம்பெறும்.

வைகாசி பூரணை தினமாகிய 12 ஆம் நாள் விசேஷ நிகழ்ச்சிகளுடன் திருவிழா நிறைவு பெறும். [இ]

### வருடாந்த மகோற்சவம்

சாவகச்சேரி, மே 28

சரசாலை, நுணுவில் சிதம்பரவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவங்கள் இம்மாதம் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தேர், தீர்த்தத் திருவிழாக்கள் ஜூன் மாதம் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் நடைபெறும்.

உற்சவகாலங்களில் சமயச் சொற்பொழிவுகளை நடத்த சரசாலை இந்து இளைஞர் மன்றம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (இ-31)

### வல்வெட்டியில்

வல்வெட்டித்துறை, மே28

"வேர்வில் பிள்ளையார்" எனப் போற்றப்படும் வல்வெட்டி ஸ்ரீ வீரசுத்தி விக்னேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

ஜூன் 7 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 8 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். வேட்டைத்திருவிழா 4 ஆம் திகதி வல்வெட்டி வன்னிச்சி அம்மன் கோவிலில் நடைபெறும். (இ-160)

## நாணய மாற்று விகிதம்

25-05-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 229.62 | 230 58 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997 15 | 4003 25 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6732 83 | 6766 66 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2365 56 | 2385.20 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | 700.64 | 711.33 |
| 100 | ஜப்பானிய யென் | 26.[illegible] | 26.[illegible] |

# சிங்கள மொழியில் கடிதங்களா?
# எனது கவனத்துக்கு கொண்டு வருக

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு துணைஅமைச்சர் பணிப்பு

யாழ்ப்பாணம் மே 28

அமைச்சு அல்லது திணைக்களங்களில் இருந்து சிங்கள மொழியில் ஏதாவது கடிதங்கள் வந்தால் தமது கவனத்துக்குக் கொண்டு வரும்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவத்துக்கு எழுதிய கடிதத்தில் கல்வி துணை அமைச்சர் திருமதி இராஜ மனோகரி புலேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இப்படிச் செய்வது தமிழ் மொழி அமுலாக்கத்துக்கு உதவும் என்றும் துணை அமைச்சர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மொழி அமுலாக்கல் தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி துணை அமைச்சர் திருமதி இராஜ மனோகரி புலேந்திரனுடனும் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ. ஜே. சற்குணராசாவுடனும் தொடர்பு கொண்டிருந்தது.

இதற்குப் பதில் அளிக்கும் வகையிலேயே கல்வி துணை அமைச்சர் அனுப்பிய கடிதம் அமைந்துள்ளது.

இதுதொடர்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தனது கட்சி மன்ற உறுப்பினர்களுக்கு விடுத்துள்ள அறிவித்தலில் மத்திய/மாகாண அமைச்சு, மாவட்ட/கோட்டக்கல்வி அலுவலகங்களில் இருந்து தமிழில் கடிதங்கள் கிடைக்காது வேறு மொழியில் கிடைத்தால் அதன் போட்டோ பிரதியை தனக்கு அனுப்பி வைக்குமாறும் அப்படி வந்த கடிதத்தை பதிவுத் தபாலில் வந்த இடத்துக்கே திருப்பி அனுப்பி விடுமாறும் கேட்டுள்ளது. [இ]

### தெங்கு பயிர்ச் செய்கை சபையின்

# களிஓடை தெங்கு நாற்று மேடை மீண்டும் இயங்க ஆரம்பம்

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச தமிழ், முஸ்லிம்மக்களின் நலன்கருதி தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையின் களி ஓடை தெங்கு நாற்றுமேடை மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

எதிர்வரும் பருவகாலத்துக்கு (அக்டோபர், நவம்பர் மாதங்களில்) இந்த நாற்று மேடையிலிருந்து கரையோரப் பிரதேச தெங்குச்செய்கையாளர்களுக்கு நடுகைக்கெனத் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் அம்பாறைப் பிராந்திய உதவி முகாமையாளர் ஜனாப் யூ. பீ. எஸ். அப்துல் கபூர் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியின் பயனாகவே இந்த நாற்றுமேடை இயங்கத் தொடங்கியுள்ளதுடன், தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் பயங்கரவாத நிலையைக் காரணம் காட்டி களிஓடை நாற்று மேடையை தெங்குப் பயிர்ச் செய்கைச் சபை மூடிவிட்டது

இதனால் இந்த மாவட்டத்தின் தமிழ், முஸ்லிம் மக்கள் குறிப்பாக நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, காரைதீவு, அட்டப்பள்ளம், ஒலுவில், பாலைமுனை, அட்டாளைச் சேனை, அக்கரைப்பற்று, திருக்கோவில், பொத்துவில் போன்ற பகுதிகளிலுள்ள தெங்குச் செய்கையாளர்கள் தென்னங்கன்றுகளையும், தெங்குப்பசளை முதலானவற்றையும் பெறுவதில் பெரும் சிரமங்களை அனுபவித்து வந்தனர்.

இவற்றைப் பெறுவதற்கு தூரஇடங்களான உகனை போன்ற சிங்களப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய அவலமும் இருந்து வந்தது.

தற்பொழுது இந்த அவல நிலையைக் கருத்திற்கொண்டு களிஓடை நாற்றுமேடையை மீண்டும் இயங்க ஆவன செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் பருவகால விநியோகத்திற்கென பதினாறாயிரம் தேங்காய்கள் இந்த நாற்று மேடையில் பதியமிடப்படவிருக்கின்றன. [இ-14]

# உ.அ.அதிபர் பிரிவு தோறும் வங்கிகள் நிறுவத்திட்டம்

வடபகுதியில் உள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் குறைந்தது ஒரு வங்கியாவது நிறுவுவதற்கு இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் திட்டம் தயாரித்துள்ளன.

மூன்று வருடங்களுக்குள் இத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை வங்கியின் உயர் வட்டாரங்கள் மேற் கொண்டுள்ளன.

வங்கிச்சேவை சகலருக்கும் கிடைப்பதே இதன் நோக்கம் ஆகும். (இ-10)

### வில்லிசை கலைஞருக்கு பாராட்டு

ஈழத்துத் தமிழ்ச் சுருக்கெழுத்துத் தந்தை ஸ்ரீ. இராமலிங்கம், சேர் ஐசக் பிற்மனை ஆகியோரைப் பற்றி சிறப்பாக வில்லிசை தயாரித்து அளித்ததற்காக வல்வெட்டி வில்லிசைக் கலைஞர் திரு. வீ. கதிரிப்பிள்ளை. அகதிகள் புனர்வாழ்வு நிதியச் செயலாளர் திரு. த. பரமசிவத்தினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

அண்மையில் உடுப்பிட்டியில் நடந்த சுருக்கெழுத்துத் தந்தையின் 1 ஆம் ஆண்டு நினைவு நிகழ்ச்சியிலேயே இவர் அவ்வில்லிசை நிகழ்ச்சியை அளித்தார் (இ-160)

### மலர்வெளியீடு

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய நுழைவாயில் அலங்கார வளைவு திரை நீக்கமும்,மகா கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழாவும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும்.

நுழைவாயில் அலங்கார வளைவு நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கத்தால் திரை நீக்கம் செய்துவைக்கப்படும்.

கும்பாஷேக மலரை யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் வெளியிட்டு வைப்பார். திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும்.

# காரைநகரில் தொழுநோய் தடுப்பு நடவடிக்கை

### 14 பேர் இனம் காணப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டனர்

அனலைதீவு மே 28

காரைநகர் களபூமி தோப்புக்காடு பகுதிகளில் தொழுநோய் பரவுவதைத் தடுக்கவும், புதிய புதிய நோயாளரை இனங்காணவும் கடந்த வெள்ளியன்று ஆய்வு நடத்தப்பட்டது.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ஜி. சந்தசாமி தலைமையில் மேற்பார்வைச் சுகாதாரப் பரிசோதகர் தொழுநோய்த்தடுப்பு பொறுப்பதிகாரி திரு. எஸ். குணரத்தினம். ஊர்காவற்றுறைப் பகுதி சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல சேவையாளர்கள் ஆகியோர் இந்த ஆய்வை நடத்தினர்.

தோப்புக்காடு கிராம முன்னேற்றச்சங்கம், அழகாபுரி கிராம முன்னேற்றச் சங்கம், மாதர் சங்கம், போறூட் நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த தொண்டர்கள் மக்களைப் பரிசோதனை நிலையங்களுக்கு அழைத்து வந்து ஆய்வுகளை நடத்த உதவினர்.

தோப்புக்காடு, அழகாபுரி, பொன்னாவளை களபூமி ஆகிய பகுதிகளில் 1200 பேர் பரிசோதனை செய்யப்பட்டனர் இதில் 14 பேருக்கு தொழுநோய் இருப்பதாக இனம் காணப்பட்டு அவ்விடத்திலேயே சிகிச்சை அளிக்கப்பட்டது.

தொழுநோய் தடுப்பு பொறுப்பதிகாரி திரு. எஸ். குணரெத்தினம் கருத்து தெரிவிக்கையில் ஆரம்பகட்டத்தில் இந்த நோயாளரை இனங்கண்டபடியால் புதிய சிகிச்சை முறையின்படி இவர்களைக் குணப்படுத்த முடியும் எனவும் புதிய மருந்துகளை நோயாளர் எடுப்பதன்மூலம் மற்றவர்களுக்கும் இந் நோய் தொற்றாமல் தடுக்கவும் முடியும் என்றும் கூறினார்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ஜி. கந்தசாமி கருத்துத் தெரிவிக்கையில், தொண்டர்களின் பூரண ஒத்துழைப்பினால்தான் மக்களைப் பரிசோதனை செய்ய முடிந்தது. இதன் மூலம் இப்பகுதியில் மேலும் தொழுநோய் தொற்றாது பாதுகாபபு நடவடிக்கை எடுக்க முடிந்தது. மக்களின் பூரண ஒத்துழைப்பின் மூலம் தான் தொழுநோய் பரவுவதைத் தடுக்கமுடியும் எனவும் கூறினார். (இ-18)

## வாசகர் திருமுகம்

### வீதி அதிகார சபை கவனிக்குமா?

மிகவும்படுமோசமாகவுள்ள தொண்டமானாறு உடுப்பிட்டிவீதி. தொண்டமானாறு-பருத்தித்துறை வீதி, தொண்டமானாறு வல்லை வீதிகள் சுமார் எட்டு வருடங்களாகத்திருத்தப்படாமல் உள்ளன. இது பற்றி வீதி அதிகாரசபைக்கு அறிவித்தும் நேரடியாகச் சந்தித்தும் இதுவரை திருத்தப்பட வில்லை.

கா, அருந்தவராசா
தொண்டமனாறு.

### செல்வச்சந்நிதி செல்லும் வீதி திருத்தப்படுமா?

நிலமை வழமைக்கு திரும்பி பல காலமாகியும் அபிவிருத்தி வேலைகள் ஆமை வேகத்திலேயே நடந்து வருகின்றன. இதே போலவே செல்வச்சந்நிதி ஆலய 751 சந்தியில் இருந்து கெருடாவில் ஊடாக உடுப்பிட்டி சனசமூக நிலையம் வரையுள்ள வீதி துவிச்சக்கர வண்டிகள் கூட ஓட்ட முடியாத அளவு அழிந்த நிலையிலுள்ளது. இதனால் செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு செல்வதற்கு வாகனங்கள் குறைவாக உள்ளதுடன். 751 பஸ் வண்டிகளும் தனியார் பஸ் வண்டிகளும் இப்பாதையூடு பிரயாணம் செய்வதற்கு அதிக நேரம் எடுக்கின்றன. இவ் வீதியை உடனடியாக செப்பனிட உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறுமிகவும் பணிவன்புடன் கேட்கிறேன்.

ந.குகதாசன்
உடுப்பிட்டி

## செய்திக்கொத்து

### கடன்

சுழிபுரம் மே 28

பண்ணாகம் மக்கள் சிக்கனச் சேமிப்பு கூட்டுறவு ஐக்கிய நாணய சங்கத்தினர் அங்கத்தவர்களுக்கு தனிக் கடனாக 3 ஆயிரம் ரூபாவும், ஈட்டுக்கடனாக 5 ஆயிரம் ரூபாவும் வழங்க தீர்மானித்துள்ளனர். (இ-28)

### பயிற்சிவகுப்புகள்

பச்சிலைப்பள்ளி மே 28

விடுதலைப்புலிகளின் தென்மராட்சி சுகாதாரப் பிரிவு நிலையத்தினால் சுகாதாரம், முதலுதவி போன்றவற்றில் பயிற்சி வகுப்புகள் பளை, சாவகச்சேரி வைத்தியசாலைகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சி வகுப்பில் சித்தி பெறுபவர்கள் கிராமிய சுகாதார நிலையங்களுக்கும், வைத்தியசாலை சிகிச்சைப் பிரிவுகளுக்கும் நியமிக்கப்படுவார்கள்.

இப்பயிற்சி பெற விரும்பும் க. பொ. த. சாதாரண தரம் கல்வி கற்ற யுவதிகள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் சுகாதாரப்பிரிவுப் பொறுப்பாளர் சேகர் அறிவித்துள்ளார். (இ-117)

### வரணி வடிசாராயம்

பச்சிலைப்பள்ளி மே 28

பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி, தென்மராட்சிக் கிழக்கு ஆகியவற்றின் தெங்கு பனம் பொருள் உற்பத்திவிற்பனவுச் சங்கங்களின் வடிசாலைகளில் உற்பத்தி செய்யப்படும் முதல்தர வடிசாராயத்தை வரணி வடிசாலை பதப்படுத்தி விற்பனைக்கு விட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி, தென்மராட்சிகிழக்கு பனம் பொருள் உற்பத்திச் சங்கங்களின் சமாசம் இச் சாராய உற்பத்திக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (இ-117)

### புங்குடுதீவில் தொழுநோய் ஆய்வு

புங்குடுதீவு மே 28

தொழுநோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் மாணவ மாணவியர்களிடம் காணப்படுகின்றனவா என்பதை அறியும் நோக்கில் சுகாதாரத்திணைக்களம் அண்மையில் ஆய்வொன்றை புங்குடுதீவிலுள்ள சகல பாடசாலைகளிலும் மேற்கொண்டது. (இ-ரி)

### அருகிவரும் நிழல் மரங்கள்

நெடுந்தீவு மே 28

வீதி ஓரங்களில் நிழல்தரும் மரங்களான வேம்பு, பூவரசு போன்றவை தறிக்கப்படுவதால் நெடுந்தீவில் வெயிலின் கொடுமை அதிகரித்து வருகின்றது.

மரங்களை மீளநடும் முயற்சியில் மரங்கள் நீண்ட காலமாக ஈடுபடாத நிலையில் உள்ள மரங்களையும் தறிக்கும் செயல் நிறுத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(இ-111)

### பணம் அன்பளிப்பு

சுழிபுரம் மே 28

பண்ணாகம் ஸ்ரீ முருகன் அன்னதான சபையினர் விசவத்தனை முருகப் பெருமான் ஆலைய நித்தியகருமங்களுக்கு 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. (இ-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்க அறிவித்தல்

**சுகாதார சேவைகள் பிராந்தியத் திணைக்களம் - யாழ்ப்பாணம்.**

இப்பிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகளின் பாவனைக்கு அவசியமான தளபாடங்கள் (மரம், உருக்கு) கொள்வனவிற்கான விலைகள் கோரப்படுகின்றன.

தளபாடங்களை வழங்க விரும்புவோர் மேலதிக விபரங்களை இக்காரியாலயத்தில் பெற்று 06-06-90 புதன் கிழமை பகல் 12.00 மணிக்கு முன் இக்காரியாலயத்தில் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும்.

ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

வைத்திய கலாநிதி
**ந. கனகசபை,**
சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

[சி-4583]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. பெரியதம்பி நல்லதம்பி**
உசன் பிரபல புகையிலை வியாபாரியும், சுருட்டுத் தயாரிப்பாளரும் (P. N. K.)

**தோற்றம்:** 20-05-1918 **மறைவு:** 29-04-1990

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காக இருந்து எம்மையெல்லாம் அன்புடன் ஆதரித்து, உலகினிலே ஒளிபெறச் செய்து, எம்மையெல்லாம் நீங்காத துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்றீர்களே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறையருளை வேண்டித் துதித்து நிற்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

உசன், மிருசுவில். (3613)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியை அழைப்பும்



மட்டுவில் தெற்கு
**சுப்பிரமணியம் கணேசலிங்கம்**
**B.A (Hons)**
(நன்நடத்தை அதிகாரி வவுனியா)

**தோற்றம்:** 27 - 10 - 1953 **மறைவு:** 30 - 04 - 1990

அன்னாரின் மறைவையொட்டி எமது துயரில் பங்கேற்று மரணச்சடங்குகளில் கலந்தும் அனுதாபச் செய்தி அனுப்பியும் உதவிய சகலருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் புதன் கிழமை (30-05-90) அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
**அன்பு மனைவி, க. கலாவதி
தாய், தந்தை, மாமன், மாமி, சகோதரர், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள், மருமக்கள், பெறாமக்கள்.**

''கமலபவனம்''
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (3646)

## ரஷ்யாவில் கூட்டுறவு இயக்கம்

மாஸ்கோ மே 27

கடந்த இரண்டு வருடங்களிலும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு அமைப்புக்களின் எண்ணிக்கை 250,000 பேருக்குத் தொழில்வாய்ப்புகிடைக்கப்பெற்றுள்ளது.

கடந்த வருடம் இவர்கள் மேற்கொண்ட உற்பத்திகளின் பெறுமதி 4 ஆயிரம் ரூபிள் ஆகும்

நுகர்வோருக்குத் தேவையான பலதரப் பட்டப் பொருட்களை இந்தக் கூட்டுறவு அமைப்புகள் உற்பத்தி செய்து வருகின்றன. இதே நேரம் இதனால் ஏற்படும் பிரதிகூலங்கள் பற்றியும் பத்திரிகைகள் எழுதியுள்ளன. [எ]

## 'கோர்பி' க்கு சமாதான விருது

வாஷிங்டன் மே 27

1991 ஆம் ஆண்டுக்கான மார்ட்டின் லூதர் கிங் (ஜூனியர்) சமாதானப் பரிசு சோவியத் ஜனாதிபதி மிக்கொயில் கோர்பச்சேவுக்கு வழங்கப்படவிருக்கிறது. (எ)

## கோர்பச்சேவுடன் பேச்சு!

சுதந்திரப்பிரகடன தீர்மானத்தை அந்தந்த மாநில நாடாளுமன்றங்கள் ரத்துச் செய்யவேண்டும்; அல்லது இடைநிறுத்தம் செய்ய வேண்டும். இல்லையேல் அம்மாநிலங்களுடன் பேச்சுக்கள் நடத்த முடியாது - இப்படி ஜனாதிபதி கோர்பச்சேவ் திட்டவட்டமாகத் தெரிவித்தார். (எ)

## சோவியத் தீவிரம்!

மாஸ்கோ மே 27

சோவியத் துருக்மேனிய குடியரசியல் போதைப் பொருள் பாவிப்பு. கடத்தல் உற்பத்தி என்பவற்றிற்கு எதிரான நடவடிக்கைகளில் அரசாங்கம் பிரதான அக்கறை காட்டுகிறது.

துருக்மேனியக் குடியரசியல் போதைப் பொருள் கடத்தல் காரரிடம் இருந்து பெருந்தொகையான பெறுமதியான புராதனப் பொருட்களையும் விலைமதிப்புள்ள தங்க நகைகளையும் கே. ஜி. பி. உளவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கள்ளக் கடத்தலுடன் போதைப்பொருள் வியாபாரம் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பதால் இரகசிய பொலீசார் இத்துறையில் தீவிர புலன் விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர்.

''சோவாசா அச்பறோல்'' தலைமையில் இறங்கிய போதைப் பொருள் வியாபார குழுவினை கே. ஜி. பி. அதிகாரிகள் குழு எனது தலைமையின் கீழ்சுற்றிவளைத்தது. இவர்கள் இரண்டு வருடமாக இவ்வியாபரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

-இவ்வாறு கே. ஜி. பி. அதிகாரி விளாடிமீர் பொய்கோ தெரிவித்தார்.

''பச்சை முக்கோணம்'' என்று அழைக்கப்படும் ஈரான் ஆப்கனிஸ்தான், சோவியத் யூனியன் எல்லைகளைக்கொண்டபிரதேசத்தில் போதைப் பொருள் கடத்தல் மும்முரமாக இடம் பெற்று வந்துள்ளது. ஆப்கனிஸ்தானில் இருந்து ஈரானுக்கு 200 கிலோ கிராம் அபினைக் கடத்திச் செல்ல முயன்ற ஈரானியர்கள் சமீபத்தில் இங்கு கைது செய்யப்பட்டனர்.

''கள்ளச் சந்தையில் ஒரு கிராம் அபினின் விலை 150,000 ரூபாய். கடந்த மூன்று வருடங்களிலும் 300 கிலோ கிராம் போதைப் பொருள் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது'' என பொய்கோ தெரிவித்தார். (எ

வெளியாகியுள்ளது!

## விஞ்ஞானம்

(மீட்டல் பயிற்சி)

ஆக்கம்: ★ J. R. சூரி ★

தொகுதி IV

உள்ளடக்கம்: **''இலத்திரனியல்''**

[சி-4540]

## பிறந்ததின வாழ்த்து



### ★ விஜயகுமார் சிவனுஜன் ★

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த விஜயகுமார் சாந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சிவனுஜன் தனது பிறந்த தினத்தை 28-05-90 இன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா கந்தர்மடம் அம்மப்பா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், தேவி அன்ரி, விக்னேஸ்மாமா, தவராசா மாமா குடும்பத்தினரும் துர்க்கையம்மன் அருளால் சகல கலைகளும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(3649)

## தொழிற் பயிற்சிகள்

ஆண் பயிலுநர்களிடமிருந்து பின்வரும் பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வெல்டிங் - 4 மாதகாலப் பயிற்சி
   மாதாந்தக்கட்டணம் 500/-
2. விவசாயம் - 1 வருடம் இலவசம்

மேற்படி இரு பயிற்சிக்கும் இலவச உணவும், தங்குமிட வசதியும் கொடுக்கப்படும். விண்ணப்பப் படிவங்களை ரூபா 3/- முத்திரைகளை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர்,
இளைஞர் பயிற்சி நிலையம்,
பரந்தன்.

[சி-4598]

வெளிவந்துவிட்டது — விற்பனையாகின்றன

இலங்கை நிருவாக சேவை (SLAS)

## போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டி

✶ நுண்ணறிவு ✶ கிரகித்தல்
✶ விடய ஆய்வு / பொது வினாத்தாள்

பயிற்சிகளுடன் நடைபெற்ற பரீட்சைகளின் 7 வருட மாதிரி வினாத்தாள்களையும் - விடைகளையும் உள்ளடக்கியது.

அஸ்ரன் வெளியீடு விலை ரூபா 88.00

கேட்டு வாங்குங்கள்: ✶ மட்டுப்படுத்தப்பட்ட
★ திறந்த

★ யாழ் நகரில் எல்லாப் புத்தகசாலைகளிலும்,
★ கொழும்பில் ''டானியல்'' வெள்ளவத்தை,
★ மட்டுநகரில் - சக்தி நூல் நிலையம்,
★ திருமலையில் - மயூரன் புத்தகசாலை
பெற்றுக் கொள்ளலாம்.

**ASTAN Institute**

166/1, Hospital Road, Jaffna.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)

[சி-4561]


குமுலுஸ் D.F. போட்டி


# BASF
# குமுலுஸ் D.F.

**பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்**

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து. பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் ''குமுலுஸ் DF போட்டி'' என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஸ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பேர்ஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.







வெட்டி அனுப்பவேண்டிய பகுதி

பெயர் ______
முகவரி ______
______
வியாபாரியின் பெயர் ______
______
முகவரி ______
______

Licence No S/731

பின்லெ கெமிக்கல்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186, வக்சோல் வீதி, கொழும்பு 2.

FINCHEM AGRO DIVISION

கிருமி நாசினிகள் அபாயகரமானவை. **அவதானமாக பாவிக்கவும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முறைசாராப் பிரிவில் பயிற்சி பெற்றோர்

# சுயதொழில் முயற்சியில் ஈடுபட இலங்கை வங்கி கடன் வழங்கும்

யாழ். கல்வி அலுவலக முறைசாராப் பிரிவில் பயிற்சி பெற்றவர்கள் சுயதொழில் ஆரம்பிக்க இலங்கை வங்கி கடன் வழங்க இருக்கிறது.

கல்வி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு. கே. கணேசமூர்த்தி மேற்சண்ட தகவலைத் தெரிவித்தார்.

இருபிணையாளர்களுடன் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா கடன் வழங்கப்படும். ஆரம்பிக்கும் பகுதியில் உள்ள மூலப்பொருளைக் கொண்டு லாபம் தரக்கூடிய வகையில் அமையும் தொழிலுக்கே கடன் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடன் பெறுபவர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் கடன் பெறவிரும்புபவர்கள் தமது ஏதாவது உடமைகளையோ, அல்லது தொழில் ஆரம்பிக்கும் இயந்திரத்தையோ வங்கிக்கு ஈடாக வைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

185 பேருக்கு அவர் கடன் பெறும் படிவங்களை வழங்கினார். [இ-3]

# தமிழர்-முஸ்லிம் ஒற்றுமைக்காக இடையறாது பாடுபட்டவர்

## ஆதம்பாவாவுக்கு புலிகள் அஞ்சலி

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கல்முனை சிற்றூர் அவையின் தலைவர் ஜனாப் ஆதம்பாவா படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும், அவருக்கு அஞ்சலி செலுத்தியும் வி. பு. ம. முன்னணியின் செயற்குழு நேற்று நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அந்தஅறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முஸ்லிம்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தது. முஸ்லிம்களுக்கு எதிராக இழைக்கப்படும் அட்டூழியங்களை அம்பலப்படுத்தியது. சிங்கள இனவாத சக்திகளுக்கு எதிராக இந்திய ஆக்கிரமிப்பு படைகளுக்கு எதிராக, இந்திய கைக்கூலி ஆயுதக் குழுக்களுக்கு எதிராக விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதம் ஏந்திப் போராடியது.

தமிழர் முஸ்லிம் தாயகமாக வடகிழக்குப் பிரதேசம் பாதுகாக்கப்படவேண்டும்; தமிழரும் முஸ்லிம்களும் ஒரே சக்தியாக ஒன்றிணைந்து போராடவேண்டும்; முஸ்லிம் மக்களின் கலாசார தனித்துவம் பேணப்படவேண்டும்; முஸ்லிம் மக்கள் தமது பிரதேசங்களில் சுதந்திரமாக கௌரவத்துடன் பாதுகாப்பாக வாழவேண்டும் என்ற ரீதியில் முற்போக்கான கொள்கைத் திட்டங்களை முன்வைத்து விடுதலைப் புலிகள் முஸ்லிம் மக்கள் மத்தியில் வேலைசெய்யத்தொடங்கினர். அவர்கள் மக்கள் மத்தியில் ஆதரவையும் பெற்றனர். முஸ்லிம் தமிழரின் ஒற்றுமையை விரும்பிய முஸ்லிம் முற்போக்காளர்கள் புலிகளின் அரசியல் அமைப்பில் இணைந்து செயற்படத் தொடங்கினர்.



தமிழர் முஸ்லிம்களை ஒன்றிணைக்கும் சக்தியாக, ஒரு தேசிய விடுதலைச் சக்தியாக புலிகள் இயக்கம் முஸ்லிம் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைவதைப் பிற்போக்குவாத அரசியல் சட்சிகள் விரும்பவில்லை விடுதலைப் புலிப் போராளிகளையும் ஆதரவாளர்களையும் கொலைசெய்து அழிக்க முற்பட்டார்கள். இந்தப் பின்னணியில்தான் எமது தோழர் ஆதம்பாவாவும் கொலை செய்யப்பட்டார்.

ஆதம்பாவா ஒரு முற்போக்குச் சிந்தனையாளர், ஒரு தன்னலமற்ற தலைவர். முஸ்லிம் மக்களின் நலனை, அவர்களது சுபீட்சத்தை இலட்சியமாகக்கொண்டு வாழ்ந்தவர். தமிழர்; முஸ்லிம் ஒற்றுமைக்காக இடையறாது பாடுபட்டவர்.

இந்த அற்புதமான தியாகிக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்திக்கொள்கிறோம். அவரது உயிர் அழிந்தாலும் அவரது இலட்சியம் என்றும் அழியப்போவதில்லை—என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)


எமதருமைப் புதல்வனும் எங்கள் அருமை அகில் குட்டியும் குடும்பத்தின் ஒளிவிளக்கும் அணையாத விளக்காய் இருந்து எமையெல்லாம் துயரில் ஆழ்த்திவிட்டுப் பிரிந்த

## ● ஓராண்டுத் திதி நாள் ●



**திருச்செல்வம் அகிலன்**
(சென் ஜோன்ஸ் கல்லூரி உயர் வகுப்பு மாணவன்)

பிறந்தநாள்: 05 – 10 – 1970

இறந்தநாள்: 10 – 05 – 1989

ஆண்டுத்திதி 28 - 05 - 1990

ஆண்டொன்று சென்றதுதான் உம் நினைவு
அதிகம் அகிலா...
அலைகடல் போல் ஓடுகின்றது கண்ணீர் அகிலா...
பால் வடியும் உன் பொன்முகம் எங்கே அகிலா...
பல்கலைக்கழகம் புகுவாய் எனநாம் கண்ட கனவு
எங்கே அகிலா...
காலம் பதில் சொல்லும் எனக் காத்திருந்தோம்
அகிலா...
கண்ணீர் தான் நாம் கண்ட மிகுதி அகிலா...
கொடுங்கூற்றுவர்கள் உன்னை அழித்தனரோ
அகிலா...
நீ செய்யாத குற்றங்களுக்கு தண்டனை இது
தானோ அகிலா...

எத்தனை ஆண்டு சென்றாலும் நித்தம் உம்மை நினைத்து எம் இதயத்தில் பூசித்து வணங்கும்.........

அன்பான அப்பா: எஸ் திருச்செல்வம் (கனடா), (முன்னை நாள் முரசொலி பிரதம ஆசிரியர்) அன்பு அம்மா: ரஞ்சிதமலர் திருச்செல்வம் (கனடா), (முன்னை நாள் சென் ஜோன் பொஸ்கோ ஆசிரியை) கிறான்மம்மி; திருமதி செ. சின்னத்துரை சித்தப்பா: எஸ் தர்மகுலசிங்கம் (கனடா), சித்தி: திலகவதி தர்மகுலசிங்கம் (கனடா), தம்பி வினோத் (கனடா), அன்ரிமார்: செரியன்ரி, பபி அன்ரி, லாலி அன்ரி, (கனடா) கீதா அன்ரி, அங்கிள்மார், பாலா அங்கிள்– ஆர்த்தி, ஆரூரன், விமல் அங்கிள் - அங்கை, அபிதா; (கனடா) தெய்வேந்திரம் அங்கிள் கௌரிக் (கனடா), குமார் அங்கிள். (13161)


## வைத்தீஸ்வர வித்தியாலய தமிழ் தின விழா

கொக்குவில், மே 28

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய தமிழ் தின விழா அடுத்தமாதம் 6 ஆம் திகதி புதன் கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

மாணவர்களின் பேச்சு, கவிஞர் 'சொக்கன்' தலைமையில் 'எங்கள் தமிழ்' என்னும் கவியரங்கும் நடைபெறும்.

இக்கவியரங்கில் கவிஞர் சோ. பத்மநாதன் 'கம்பன் தந்த தமிழ்' என்ற தலைப்பிலும், கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை 'இளங்கோ தந்த தமிழ்' என்ற தலைப்பிலும், கவிஞர் சா. வே. பஞ்சாட்சரம் 'வள்ளுவன் தந்த தமிழ்' என்ற தலைப்பிலும், கவிஞர் பா. சத்தியசீலன் 'பாரதி தந்த தமிழ்' என்ற தலைப்பிலும் கவி புனைந்துவழங்குவர். (இ-69)

## மாலைதீவு - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டது.

ஏனைய 56 பேருக்கும் 17 முதல் 38 ஆண்டுகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனை அனுபவிப்பதற்காக அவர்கள் அனைவரும் தனிமையான தீவில் கொண்டு போய் விடப்பட்டுள்ளனர்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி 68 பேரினதும் பெயர்களை எம்மிடம் சமர்ப்பித்துள்ளது - இப்படி ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிராட்மன் வீரக்கூன் சொன்னார்.

மாலைதீவு அரசாங்கத்துடன் பேசி 68 பேரையும் விடுவிப்பதா, இல்லையா என்பது பற்றி அரசு இன்னமும் முடிவு செய்யவில்லை. ஆனால் விஷயம் பரிசீலனையில் உள்ளது என்றும் திரு. வீரக்கூன் சொன்னார்.

'மாலைதீவில் சிறை வைக்கப்பட்டுள்ள 68 புளொட் உறுப்பினர்களை அங்கிருந்து விடுவித்து சில காலம் இலங்கை அரசின் பாதுகாப்பில் வைத்து இருக்கும்படி ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இது விஷயம் குறித்து இலங்கை அரசு எம்முடன் தொடர்பு கொள்ளவில்லை என்று கொழும்பில் உள்ள மாலைதீவு தூதரக பொறுப்பதிகாரி அஹ்மத் அப்துல்லா சொன்னார்.

மாலைதீவில் சிறை வைக்கப்பட்டுள்ள 68 புளொட் உறுப்பினர்களில் பெனடிக்ற் அன்ரனி றிச்சர்ட் (பாபு), எஸ். கணேசலிங்கம் (பாருக்), ஆர். ரவி (ஆர் ஆர்), பிரென்ஸ்லி (முகுந்தன்), சிங்கராசா நேசராசா (சங்கர்) ஆகியோர் உள்ளனர்.

இந்த 68 பேரையும் ஏற்க முன்னர் இலங்கை அரசு மறுப்புத் தெரிவித்து இருந்தது. (இ-எ)

## அரசு சார்பற்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றன.

இனிமேல் உதவிகளை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இயங்கும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக வே வழங்கவெளிநாட்டுநிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன.

இதற்காக இந்த நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் இங்குள்ள அரசு சார்பற்ற நிறுவனங்களின் தரம், ஆற்றல் ஆகியவற்றை ஆராய்ந்து வருகின்றனர். (இ-3)

## பெண்களும்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும்போதுதான் ஒரு தேசிய விடுதலைப்போராட்டம் முழுமைபெறுகிறது. தேசிய விடுதலை என்னும் பொழுது அதில் பெண்ணினத்தின் சமூக விடுதலையும் இணைபிரியாத அங்கமாக அமைகிறது. எமது தேசிய விடுதலைப் போராட்டமும் பெண் விடுதலையை ஒரு பிரதான குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பங்குகொள்வதற்கு இன்று பெரும் எண்ணிக்கையாக பெண்கள் முன்வந்துள்ளனர். தேசிய சமூக ஒடுக்குமுறையால் எழுந்த எதார்த்தப் புறநிலைகளும், வரலாற்று நிர்ப்பந்தங்களுமே தமிழீழப் பெண் இனத்தை போராட்டப்பாதையில் தள்ளியது எனலாம்.

எமது தலைவர் திரு பிரபாகரன் தமிழீழப் பெண்களின் விடுதலைக்கு முக்கியத்துவம் அளித்தார். ஆண்களுக்கு சரிநிகராக பெண்களும் ஆயுதமேந்திப் போராட வேண்டும் என்ற புரட்சிகரமான கருத்தை அன்றுதொட்டு வலியுறுத்திவந்தார் அவரது புரட்சிகர சிந்தனையின் வடிவமாகவே இன்று எம்மத்தியில் பெண் போராளிகளைக் கொண்ட இராணுவ அரசியல் அமைப்புகள் தோற்றம் கொண்டுள்ளன— என்றார்.

யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி பானு வரவேற்புரை நிகழ்த்தினார். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு உறுப்பினரான செல்வி. கீதா யாப்பின் அடிப்படைக் கொள்கைகளையும், சட்ட விதிகளையும் அறிமுகம் செய்து விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்.

யாப்பு உருவாக்கம் சம்பந்தமான விவாதத்தில் பங்குபற்றிப் பேசிய மகளிர் முன்னணியின் பிரதம இணைப்பாளரான செல்வி. ஜெயா தமது உரையில் -

பெண்கள் விடுதலை என்ற போர்வையில் இதுவரைகாலமும் இயங்கிவந்த சில மாதர் அமைப்புகளின் போலியான கருத்துக்களையும், தவறான நடைமுறைகளையும் கண்டித்தார். பெண்விடுதலை என்ற புனித இலட்சியத்துக்கு அவர்களது போக்கும் செயலுன் களங்கம் ஏற்படுத்தின எம்று குற்றம் சாட்டினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு யோகரத்தினம் யோகி அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. டொமினிக், யாழ். மாவட்ட மகளிர் படைப்பிரிவு தளபதி செல்வி. ஜெயந்தி ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். சகல மாவட்டங்களிலிருந்தும் மகளிர் முன்னணிப் பிரதிநிதிகள் பலரும் இம்மாநாட்டில் பங்குபற்றினர்.

இந்த யாப்பு மாநாடு நாளையும், மறுதினமும் தொடர்ந்து நடைபெறும். [அ]

## புத்தக கண்காட்சி

வல்வெட்டித்துறை மே 28

ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தின் ஆதரவில் ஸ்ரீ இராமகிருஷ்ணர், விவேகானந்தர் ஆகியோரது புத்தகக் கண்காட்சி ஒன்று எதிர்வரும் 1 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் திறந்து வைக்கப்படவுள்ளது. (இ-160)

## கூட்டுறவு பால்பண்ணை சங்கம்

யாழ்ப்பாணம், மே 28

கடந்த 10 வருடகாலமாக கூட்டப்படாத திருநெல்வேலியில் உள்ள மாவட்ட கூட்டுறவு பால்பண்ணை அபிவிருத்திச்சங்கத்தின் பொதுச்சபையைக்கூட்டுவது தொடர்பாக ஆராய மூவர் கொண்ட கட்டுப் பாட்டுச்சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

திட்டமிடல் பணிப்பாளர் திரு துரைசிங்கம் இச்சபைக்குத் தலைமை வகிப்பார். (இ-3)

## ஆறாவது - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார்கள்.

துரோகிகள் என்ற பட்டத்தைச் சுமந்துகொண்டு ஆறாவது திருத்த நீக்கத்தை எதிர்த்து நாம் வாக்களிப்பதன் மூலம் -

எமது கௌரவத்தை இழப்பதுடன் புலிகளின் துப்பாக்கிக் கரங்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதாகவும் அது அமைந்துவிடும்.

ஆறாவது சரத்துக்குக் கீழ் வந்த ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் துரோகிகள் தானா?

நாம் மௌனம் சாதிப்பதற்குக் காரணம் உண்டு. விரைவில கட்சி பதில் அளிக்கும் - என்றார். (உ-2-3)

## நடமாடும்----

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குதல், பிறப்பு இறப்பு திருமணபதிவு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளுதல் போன்ற பணிகளும் நடைபெறும்.

நடமாடும் செயலக அலுவல்களைத் துரிதப்படுத்துவதற்காக உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு தற்காலிக வானொலி தொலைத் தொடர்பு வசதி அளிக்கப்பட்டுள்ளது. (இ-ரி)

## புலிகள் - அரசு- -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்ரன் பாலசிங்கம் ஆகியோரை அவர் சந்திப்பார்.

இந்தச் சந்திப்பின்போது முக்கியமாக அரசியல் விவகாரங்கள் பற்றியே ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குதல் மாகாணசபையை கலைத்து தேர்தல் நடத்துதல் ஆகிய விடயங்கள் பற்றி ஆராயப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

'' ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு ஈரோஸின் அரசியற் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணி கொண்டுவரும் தனிநபர் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு சட்டரீதியாக காலதாமதம் ஏற்படவாய்ப்பு உண்டு எனக் கண்டால் அத்தகைய சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருமாறு இப்பேச்சுக்களின்போது அரசாங்கத்தை வலியுறுத்துவோம்'' — இவ்வாறு புலிகளின் உயர்மட்டப்பிரமுகர் ஒருவர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

காலைப் பேச்சுக்களை முடித்துக்கொண்டு அமைச்சர் ஹமீத் விடுதலைப்புலிகளின் உயர்மட்டத் தலைவர்களுடன் பலாலி திரும்புவார்.

அங்கு அவர் முப்படைத் தளபதிகள் சகிதம்விடுதலைப் புலிகளின் தலைவர்களோடு வடக்கு, கிழக்கின் பாதுகாப்பு நிலைபற்றி விரிவாக ஆராய்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-9)

## அச்சுவேலி - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பூட்டப்பட்டிருந்தன. வீதிகளில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

பூதவுடல் தகனக் கிரியைகளுக்கு முன்னர் பொது மக்கள் அஞ்சலிக்காக அச்சுவேலி பஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தது. (இ-11)

# மேலும் 43குடும்பங்களுக்கு கைத்தொழில் முயற்சிக் கடன்

யாழ்ப்பாணம், மே 28

யாழ்- உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேலும் 43 குடும்பங்கள் ஜனசக்தித் திட்டத்தின் கீழ் கைத்தொழில் முயற்சிக்கான கடனைப் பெற்றுக்கொள்ளவுள்ளன.

இக்கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மக்கள் வங்கி துரிதமாக மேற்கொண்டுள்ளது.

குருநகர்மேற்கு, பொம்மைவெளி, கொழும்புத்துறை ஆகிய இடங்களைச்சேர்ந்த 43 குடும்பங்களே இக்கடனைப் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. அடுத்த மாதம் முதல் இவர்களுக்கான கடன் தொகையை மக்கள் வங்கி வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனசக்தித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 45 குடும்பங்கள் இக்கடனைப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## குரு பட்டாபிஷேகம்

வல்வெட்டித்துறை, மே 28

அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபைத் தலைவரும், வல்வை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவுமாகிய சோ. தண்டபாணிக தேசிகர் அவர்களால் இன்று திங்கட்கிழமை வியாபாரிமூலை கற்பக விநாயகர் ஆலயத்தில் மேற்படி தேவஸ்தான பிரதம குருவின் இருபுதல்வர்களான விக்கினராஜா தண்டபாணிக தேசிகர் ஆகியோருக்கு குரு பட்டாபிஷேகம் செய்து வைக்கப்படுகின்றது. (இ-160)

## காத்தான்குடி சென்ற பஸ்ஸில் கொள்ளை

கொழும்பு, மே 28

கொழும்பில் இருந்து காத்தான்குடி நோக்கிச் சென்ற பஸ் ஒன்று வெலிகந்தையில் வைத்து மறிக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டது.

வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பிரயாணிகளிடம் இருந்து இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள். உடுப்புகள் மற்றும் பொருள்கள் கொள்ளையிடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-2-3)

## இலங்கையின் ஐக்கியம் பற்றி ஜே. ஆர்.

இலங்கை சட்டக்கல்லூரி பிரதான மண்டபத்தில் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன ''இலங்கையின் ஐக்கியம், இறைமை, ஒருமைப்பாடு'' பற்றி எதிர்வரும் 1 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பேச இருக்கிறார்.

இந்திய — இலங்கை அமைதி ஒப்பந்தம் பற்றி முக்கியத்துவம் கொடுத்து அவர் பேசுவார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இலங்கைச் சட்ட மாணவர் சங்கம் இதனை ஒழுங்கு செய்துள்ளது. (இ-எ)

## மட்டக்களப்பில் கவி அரங்கம்

மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவையின் கவி அரங்கம் எதிர்வரும் 9 ஆம் திகதி மட்டக்களப்பு பொது நூலக மண்டபத்தில் நடைபெறும்.


## பகிரங்க ஏலவிற்பனை

எமது சங்கத்துக்குச் சொந்தமான 26/299 இலக்க ''டாட்டா பென்ஸ்'' அடிச் சட்டம் கரைதுறைப் பற்று ப. நோ. கூ. சங்கத் தலைமையலுவலகத்தில் வைத்து 14 - 06 - 90 ஆம் திகதி காலை 9.00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது. கூடுதலான கேள்விக்காரருக்கே முன்னுரிமை அளிக்கப்படும். கேள்வித் தொகையின் அரைப் (½ பங்கு) பங்கை உடன் செலுத்துவதுடன் மிகுதிப் பணத்தை ஒருவார காலத்துக்குள் செலுத்தி குறித்த வாகனத்தை சங்க எல்லைப் பரப்புக்குள் இருந்து அப்புறப்படுத்துதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு.

[சி-4601]

பிரயாணம்! பிரயாணம்!! பிரயாணம்!!!

## 'M' THREE TRAVELS

வழங்கும்

சவூதி அரேபியா, மாலைதீவு பிரயாணங்கள்

### சவூதி அரேபியா (Saudi Arabia)

| | | VACANCY | SALARY |
|---|---|---|---|
| 1. | Supervisor | 4 | 650 SR. |
| 2. | Forman | 6 | 950 SR. |
| 3. | Driver | 5 | 550 SR. |
| 4. | Labourers | 175 | 350 SR. |
| 5. | Cleaners | 60 | 350 SR. |

### மாலைதீவு (Maldives)

| | | | |
|---|---|---|---|
| 1. | Architect Assistant | 1 | 200 — 250 USD. |
| 2. | Carpenters | 3 | 150 — 200 USD. |
| 3. | Mason | 10 | 150 — 200 USD. |
| 4. | Drafts Man [சம்பளம் நேர்முகப் பரீட்சையில் தீர்மானிக்கப்படும்] | 2 | |
| 5. | Plumbers | 2 | 150 — 200 USD. |
| 6. | Welders | 10 | 250 — 300 USD. |
| 7. | Diesel Petrol Mechanic | 5 | 250 — 300 USD. |
| 8 | Computer Opereator | 1 | 350 USD. |

★ நேர்முகப் பரீட்சை விரைவில் கொழும்பில் [Colombo] நடைபெறும்.

★★ எம் மூலம் சென்ற வாரம் பிரயாணம் செய்தவர்களுடைய அடையாளஅட்டைகள் எமது காரியாலயத்தில் உள்ளன. உறவினர்கள் வந்து பெற்றுக் கொள்ளவும்.

★★★ Passport, Bond என்பன குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

★★★★ நம்பிக்கை, நாணயம் என்பவற்றிற்கு நீங்கள் நாட வேண்டிய தாபனம்.

## 'M' Three Travels

தலைமை அலுவலகம்
''இந்திரபவனம்'',
சோதி வீதி,
காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்
இல. 1, 2 ஆவது ஒழுங்கை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-4604]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இன்றைய No 1 நீலசோப்
தேசிக்காய் வாசனையுடன்
எம்டீ நீல சோப்
எம்டீ என்ரபிறைஸஸ், அச்சுவேலி.

# உதயன்

28 - 05 - 1990 திங்கட்கிழமை

எம்டீ பார் சோப்
எம்டீ என்ரபிறைஸஸ், அச்சுவேலி.

## "ஷப்றா" கிண்ணத்தை ஜொனியன்ஸ் வென்றது!

### 36 ஓட்டங்களினால் ஜொலிஸ்ரார்ஸ் தோல்வி

யாழ்ப்பாணம், மே 28

''ஷப்றா'' கிண்ணத்துக்காக நேற்று நடைபெற்ற விறுவிறுப்பான கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ் ஜொனியன்ஸ் அணி வெற்றி பெற்று சாம்பியனானது.

ஷப்றா யூனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்ட இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ், ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணிகள் இந்த ஆட்டத்தில் மோதின. 40 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களின் அடிப்படையில் இந்த ஆட்டம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 39 3 ஓவர்களில் 256 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. சஞ்சீவன் 65, சூரியகுமார் 36, மகிந்தா 39, கணேஸ்பஞ்சன் 34 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் நரேந்திரன் 8 ஓவர்களில் 42 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், பிரபாகரன் 8 ஓவர்களில் 61 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், தயாளன் 7·3 ஓவர்களில் 51 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். அடுத்து ஆடிய ஜொலிஸ்ராஸ் அணியினர் 37 2 ஓவர்களில் 220 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். நரேந்திரன் 56, விஜயகுமார் 56, கபிலன் 54 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சதீசன் 3·2 ஓவர்களில் 13 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும், மகிந்தா 6 ஓவர்களில் 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், ரவீந்திரா 7 ஓவர்களில் 28 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இவ் இறுதிப் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக சஞ்சீவன் (ஜொனியன்ஸ்), சிறந்த பந்துவீச்சு வீரராக சதீசன் (ஜொனியன்ஸ்), சிறந்த பந்து தடுப்பு வீரராக கோபிராஜ் (ஜொலிஸ்ராஸ்), சிறந்த பல்துறை வீரராக நரேந்திரன், போட்டியின் சிறப்பு வீரராக சதீசன் (ஜொனியன்ஸ்) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆரம்ப சுற்றுப் போட்டிகளில் சிறப்பாக விளையாடிய மகிந்தா (ஜொனியன்ஸ்) சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், பொன்வில்லியஸ் (மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம்) சிறந்த பந்துவீச்சாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சிறந்த காட்சுகளுக்கான பரிசுகள் சண்முகலிங்கம் (சென்ரலைட்ஸ்), தயாளன் (ஜொலிஸ்ராஸ்) ஆகியோருக்கும், சதமடித்தோருக்கான பரிசுகள் ரவீந்திரா (ஜொனியன்ஸ்), பிரசாந்தன் (ஜொனியன்ஸ்) ஆகியோருக்கும் வழங்கப்பட்டன.

நேற்றைய போட்டியின் பிரதம விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன் கலந்துகொண்டார். திருமதி எஸ், சண்முகநாதன் வீரர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

## மாரடைப்பு மரணங்கள்:

## ஆஸ்பத்திரியில் அனுமதி பெறாமல் இறப்போர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம் மே 28

ஆஸ்பத்திரியில் அனுமதிக்படாமலே மாரடைப்பால் மரணமாவோரின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. 1986 ஆம் ஆண்டில் 31.7 சதவீதமாக இருந்த அத்தகைய மரணங்கள் 1989 ஆம் ஆண்டில் 41.2 சத வீதமாக உயர்ந்திருக்கிறது.

பல்கலைக்கழக வைத்தியப் பிரிவு டாக்டர் ஏ. நாகேஸ்வரன் தலைமையில் மேற்கொண்ட ஓர் ஆய்வின் போது இந்த விபரம் தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபைப் பிரதேசத்தை ஆய்வுக்குரிய பகுதியாகக் கொண்டு எடுக்கப்பட்ட புள்ளிவிவர — ஆய்வு சம்பந்தமான அறிக்கை கடந்த மூன்று நாட்களாக நடந்து முடிந்த யாழ்ப்பாணம் மருத்துவக்கழகத்தின் எட்டாவது மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையிலேயே மேற்கண்ட தரவு வெளியிடப்பட்டுள்ளது.

பிரஸ்தாப ஆய்வறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது முக்கிய தகவல்கள் வருமாறு:

★ 1989இல் மாரடைப்பால் மரணமானோர் .043 வீதமாகும்.

★ 61 — 80 வயதுக்கு உட்பட்டவர்களே மாரடைப்பால் இறந்தவர்களில் அனேகர். அவர்களில் ஆண்கள் 60. 6 சதவீதம், பெண்கள் 66.7 சதவீதம்.

★ மாரடைப்பால் பாதிக்கப்படுவர்களை உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து சேர்ப்பதில் வாகனங்களைக் குறிப்பாக, வாடகைக் காரர்களை அமர்த்துவதில் ஏற்படும் கஷ்டம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வருவதற்கு முன் மரணத்தை ஏற்படுத்துகிறது.

மாரடைப்பால் இறந்த ஆண்களில் 57. 6 சதவீதமானோர் புகைப்பவர்கள். அனேகமானோர் சுருட்டுப் புகைப்பவர்கள். பெண்களில் 27. 8 சத வீதமானோர் புகைப்பவர்கள்.

மாரடைப்பால் இறந்தவர்களில் 19. 6 சத வீதத்தினர் நீரிழிவு வியாதி முற்றியவர்கள், 21.6 சத வீதத்தின் உயர் இரத்த அழுத்தம் உடையவர்கள், 9 8 சதவீதத்தினர் மேற்கூறிய இரண்டும் ஒன்றாகப் பீடிக்கப்பட்டவர்கள். (அ)

## கனகாம்பிகைக் குளம் இலங்கை வங்கி கருமபீடம்

யாழ்ப்பாணம், மே 28

பின்தங்கிய பிரதேசமான கனகாம்பிகைக்குளம் பகுதியில் இலங்கை வங்கியின் விசேஷ கருமபீடம் நடத்தப்பட்டபோது 12 லட்சம் ரூபா சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்தங்கிய பிரதேச மக்களிடையே சேமிப்பை ஊக்குவிக்குமுகமாக கனகாம்பிகைக் குளம் அம்மன் கோவில் உற்சவத்தில் இலங்கை வங்கியின் விசேஷ கருமபீடம் அமைக்கப்பட்டது.

சேமிப்பு, சிறுவர் சேமிப்பு கணக்குகளை மக்கள் கூடுதலாக ஆரம்பித்தனர். 12 லட்சம் ரூபாவுக்கு மக்கள் கணக்குகளை ஆரம்பித்தனர் என்று வங்கி அதிகாரி தெரிவித்தார்:

பின்தங்கிய பிரதேச மக்களை சேமிப்பில் ஊக்குவிக்கவே இந்தப் பீடம் அமைக்கப்பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார். (இ-3)

## ஆறு தங்கப் பாளங்களுடன் வந்திறங்கிய இலங்கையர்

ஆறு தங்கப் பாளங்கள் மற்றும் தங்கச் சங்கிலிகளுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய இலங்கையர் ஒருவரை சுங்க அதிகாரிகள் கைது செய்தனர்.

சிங்கப்பூரில் இருந்து இந்த நபர் வெள்ளிக்கிழமை மாலை வந்திறங்கினார்.

தன்னிடம் கடத்தல் பொருள்கள் ஒன்றுமே இல்லை என்று மறுத்த அந்த நபர் 'மெட்டல் டிடெக்டர்' சோதனையின் பின்னர் தங்கப்பாளங்களை உடலில் மறைத்து வைத்திருப்பதை ஒப்புக் கொண்டார். (இ-எ)

## போபேர்ஸ் பேர இரகசியம் இந்திய அரசாங்கத்திடம்!

### வெளியிட சுவிஸ் அரசிடம் அனுமதி கோரல்

புதுடில்லி மே 27

போபேர்ஸ் பேர ஊழல் இரகசிய அறிக்கையை பகிரங்கமாக வெளியிடுவதற்கு சுவிட்சர்லாந்து அரசின் அனுமதியை இந்தியா கேட்டுள்ளது.

சுவிஸ் அரசு புதுடில்லிக்கு போபேர்ஸ் பேர ஊழல் தொடர்பான சகல அறிக்கைகளையும் அனுப்பி வைத்து உள்ளது.

அந்த அறிக்கைகளில் இரகசியமானது என்று குறிப்பிடப்பட்ட விஷயங்களை பகிரங்கமாக்க வேண்டாம் என்ற குறிப்புடன்தான் சுவிஸ் அரசு இந்த அறிக்கைகளை அனுப்பி வைத்துள்ளது என்று பிரதமர் வி. பி. சிங் நேற்றுச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (எ)

NEW BECON
ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
A/L 90
DAY CLASS
★ PAPER CLASS ★
பொருளியல்- லோகசிங்கம்
அளவையியல்- விக்கி
வர்த்தகம் - ஜெயராமன்
தமிழ் - மீரா
ஆரம்பம்: 30-05-90
காலை 6-30
[13165]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28-05-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இரண்டு பக்கங்களிலும் மாற்றம்; பேச்சுவார்த்தை தொடர வேண்டும்

### ஜனாதிபதி பேட்டி

கொழும்பு, மே 28

இனப்பிரச்சினை சம்பந்தமாக இரண்டு பக்கங்களிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக நாம் ஆரம்பித்த பேச்சுவார்த்தை தொடரவேண்டும். இதுவே இன்றைய தேவை

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

முன்னாள் யாழ் அரச அதிபரும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவருமான நெவில் ஜெயவீராவுக்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு கூறினார்.

பேட்டியின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண்பதில், கடந்த 4 தசாப்தங்களிலும் பார்க்க மிக நெருக்கமாக இன்று நாம் வந்துள்ளோம்.

இது தொடர்பாக நாம் ஆரம்பித்த பேச்சுக்கள் தொடர வேண்டும் இதுவே இன்றைய தேவை.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சட்டவரையறையை நாம் ஏற்கனவே அமைத்துள்ளோம். அதுதான் 13ஆவது திருத்தம்.

மும்மொழித் திட்டமும் அதிகாரப்பரவலாக்கலும் அத்திவாரமாக அமைகின்றன. அவற்றின் மீது நாம் தீர்வை கட்டி எழுப்பவேண்டும்.

வடக்கிலும் தெற்கிலும் மக்கள் இன்று சமாதானத்தையே வேண்டுகின்றனர்.

பாரிய இழப்புக்களை அவர்கள் சந்தித்து விட்டனர்; கசப்பான பாடத்தைப் படித்துள்ளனர்.

இரண்டு பக்கத்திலும் இதயமாற்றம் ஏற்பட்டுள்ளது. நாம் அடைந்த மிகப் பெரிய லாபம் இது இதற்காக நாம் பாரிய விலையைக் கொடுத்திருக்கிறோம். இன்னும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியுள்ளது.

புதிய புதிய பிரச்சினைகள் தோன்றுவதைத் தவிர்க்க முடியாது. நாற்பதாண்டுகளாக நீடிக்கும் மோதல்பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம்.

நான் ஜனாதிபதியாகவந்து ஓராண்டு காலம்தான் ஆகிறது.

#### உடனடிப் பரிகாரம் கஷ்டம்

பரம்பரையாக வந்த பிரச்சனைகளுக்கு எல்லாம் உடனடிப் பரிகாரம் காணவேண்டும் என்று எதிர்பார்க்கமுடியாது. நாம் இன்று சாதித்தவையே பெரிய அதிசயம் தான். இதை எந்த நம்பிக்கையும் அற்றவர் [illegible] கொள்வர்.

வெளிநாட்டுப் [illegible] நாட்டைவிட்டு வெளியேறிவிட்டன. யுத்தம் நடத்திய குழுக்கள் இன்று பேச்சுக்கள் நடத்துகின்றன. அக் குழுக்களில் மிகப்பலம்பொருந்திய ஜனநாயக பாதையில் சேரத்தயாராக முன்வந்துள்ளது.

கேள்வி: ஜனாதிபதி அவர்களே! விடுதலைப் புலிகள் இயக்கம் மீது நீங்கள் வைத்துள்ள விசுவாசம் தவறாகி விட்டது; அவர்களுக்கு நீங்கள் அதிகம் விட்டுக்கொடுத்துள்ளீர்கள். உங்கள்மீது மீண்டும் மீண்டும் குற்றம் சுமத்தப்பட்டுவருகிறது. உங்கள் கருத்து?

ஜனாதிபதி: இந்த விமரிசனத்தை நானும் கேட்டுள்ளேன். முதலில் நான் கேட்கிறேன்... விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் நாம் ஏன் பேசக்கூடாது? அவர்களின் கடந்தகால செயல்களை வைத்து அவர்களுடன் பேசக்கூடாது என்கிறார்களா?

கடந்தகால பயங்கர அனுபவங்களை நாம் மீண்டும் நினைவு படுத்த வேண்டுமா? கடந்தகால நினைவுகளை பிடித்துக்கொண்டிருந்தோமானால் எப்படி முன்னேறுவது?

அடிப்படை மாற்றம் ஏற்பட வேண்டும். இது எனது அரசியல் சித்தாந்தம் மட்டும் அல்ல; என் வாழ்க்கையின் அணுகுமுறையும் இதுவே.

சந்தேகம், அச்சம் ஆகியவற்றைக் கைவிட ஏதாவது ஒரு தரப்பு முன்வராத பட்சத்தில், போக்கில் பண்பில் அடிப்படை மாற்றங்களை நாம் காணமுடியாது.

'கடந்த காலத்தை மறந்து நாம் பேசுவோம்' — என்ற நிலையை நான் எடுத்தேன். எனது விசுவாசம், நம்பிக்கைக்கு வெற்றி கிடைத்துள்ளது.

பேசவருமாறு விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தூண்டினோம்.

இன்று நாம் அவர்களுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தி உள்ளோம். பதிலுக்கு அவர்கள் எம்மை நம்புகிறார்கள்.

மனித இனத்தில் அசையா நம்பிக்கை வைக்க வேண்டும். நிரந்தரமாக தீமையான மனிதர்கள் என்று எவரும் இருக்கிறார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. மனிதனில் தவறுகள் விடுபவர்களும் உண்டு.

நான் இந்த தத்துவத்தை ஜே. வி. பியுடனும் கடைப்பிடித்தேன். துரதிஷ்டவசமாக எனதுநல்லெண்ணத்தை அவர்கள் ஏற்கவில்லை.

[illegible]

பேச்சு [illegible]

வடக்கு - கிழக்கு அமைதி ஒற்றுமை நிலவ மேடை அமைத்துள்ளோம் என்று மட்டும் இத்தருணத்தில் என்னால் சொல்ல முடியும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மட்டும் அல்ல; திறந்த மனம் நம்பிக்கை என்ற அடிப்படையில் எவருடனும் பேச்சு நடத்த நான் தயார்.

இன்னும் பல விஷயங்கள் பற்றிப் பேச உள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

கடந்த மார்ச்சில் வடக்கு-கிழக்கில் இரத்த ஆறு ஓடும் என்று பலரும் எதிர்பார்த்தனர். என்ன நடந்தது? இரத்த ஆறு ஓடிற்றா?

அது போல சிலர் காணிப் பிரச்சினை, ஆயுத ஒப்படைப்பு, ஈழம் கோரிக்கை ஆகியன பற்றி சண்டை பிடிக்க முயற்சிக்கிறார்கள்.

நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

— ஏற முடியாத மலை என்று ஒன்று இல்லை.

— கடக்க முடியாத ஆறு என்று ஒன்று கிடையாது.

நாம் ஒருவரை ஒருவர் விசுவாசிப்போம். ஒருவரின் நல்ல நோக்கம், நல்ல அறிவு ஆகியவற்றை பரஸ்பரம் விசுவாசிப்போம்.

கேள்வி: நீங்கள் இந்திய எதிர்ப்பாளர் என்று கூறுவது பற்றி......

பதில்: நான் இந்திய எதிர்ப்பாளர் அல்லன். எனது சொந்த மண்ணை வெளிநாட்டுத் துருப்புகள் ஆக்கிரமிப்பதற்கு நான் எதிரானவன். வெளிநாட்டு இராணுவம் எதுவும் எனது நாட்டில் இருக்க நான் அனுமதிக்கமாட்டேன்.

எனது சண்டை இந்தியாவுடன் அல்ல; அச்சமயத்தில் இந்தியாவில் பதவியில் இருந்த அரசுடன் தான் எனது சண்டை இருந்தது. புதுடில்லியில் உள்ள தற்போதைய அரசுடன் எனக்கு தகராறு இல்லை.

இப்படி ஜனாதிபதி பிரேமதாச கூறினார். (எ-இ)

## கடத்தல் முயற்சி சீனர் கைது

கொழும்பு, மே 28

ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்களைக் கடத்த முயற்சித்தார் என்று கூறப்படும் சீனப் பிரசை ஒருவரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைதுசெய்தனர்.

இலங்கையில் இருந்து தாயகம் திரும்புவதற்காக இந்த சீனப் பிரசை கட்டுநாயக்கா சென்ற சமயம் இக்கடத்தல் முயற்சி கண்டுபிடிக்கப்பட்டது. (இ-எ)

## உல்லாசப் பிரயாணிகள் வடபகுதி வர விருப்பம்

யாழ்ப்பாணம், மே 28

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை வட பகுதிக்கு அழைத்துவரக்கூடிய சாத்தியக்கூறுகளைக் கண்டறிவதற்காக கொழும்பில் உள்ள உல்லாசப் பிரயாணி ஏஜென்சியைச் சேர்ந்த குழு ஒன்று தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளது.

உல்லாசப் பிரயாணிகள் யாழ்ப்பாணத்தில் தங்குவதற்கு ஏற்ற ஹோட்டல் வசதி, அவர்கள் சுற்றிப்பார்க்கக்கூடிய இடங்கள் ஆகியவை குறித்து இக்குழு நேரில் ஆராய்கிறது.

இக்குழு ஏற்கெனவே கிழக்கில் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய நகரங்களுக்கும் விஜயம் மேற்கொண்டிருக்கிறது.

வெளிநாடுகளில் இருந்து வரும் உல்லாசப்பிரயாணிகள் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்குச் செல்வதற்கு விரும்புகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

## வடமராட்சியில் கோமாரி தடுப்பு

வடமராட்சிப் பகுதியில் பரவிவரும் கோமாரிநோயை கட்டுப்படுத்துவதற்காக பருத்தித்துறை அரச கால்நடை வைத்தியர் அலுவலகத்தினர் கோமாரி தடுப்பு மருந்து ஏற்றும் வேலைகளை துரிதப்படுத்தி உள்ளனர்.

இன்று 28 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஜூன் 3 ஆம் திகதி ஞாயிறு வரை தடுப்பு மருந்து ஏற்றப்படும் இடங்கள் வருமாறு:

திங்கள்- கல்லுவம் வாசிகசாலை, செவ்வா- யாக்கரு பிள்ளையார் கோவில், புதன்- புறாப்பொறுக்கி ஆலடிப்பள்ளிக்கூடத்திற்கு அருகாமையில், வியாழன் -இமையாணன் அறிவாலயம், வெள்ளி -உடுப்பிட்டி சனசமூகநிலையம் வீரபத்திகோவிலடி, வல்லை, சனி- செல்வச்சந்நிதி கோவில், தொண்டமானாறு, ஞாயிறு- கலைமணி வாசிகசாலை 3ம் சந்தி தொண்டமானாறு.

கோமாரித்தடுப்பு மருந்து கரைக்கப்பட்டபின் அதிக நேரத்துக்கு வைத்திருக்க இயலாது என்பதால் கால்நடைகளைக்குறிப்பிட்ட இடங்களில் நேரகாலத்துடன் கட்டி வைக்குமாறு கால்நடைகளின் சொந்தக்காரர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (இ160)

## இந்திய - பாகிஸ்தான் அணு ஆயுத யுத்தம்?

### உளவறியும் செய்மதி மூலம் தகவல்

கொழும்பு, மே 28

காஷ்மீர் தகராறு காரணமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே அணுவாயுத யுத்தமொன்று ஏற்படக்கூடும் என அமெரிக்காவும் சோவியத் யூனியனும் அச்சம் தெரிவித்தன.

இந்தியாவும் பாகிஸ்தானும் அணுவாயுதப் போருக்கு தயாராகி வருவதாக உளவறியும் வட்டாரங்கள் தகவல் தெரிவித்ததை அடுத்து இந்நிலை எழுந்திருக்கிறது.

பாகிஸ்தானின் அணுவாயுத நிலையம் ஒன்றிலிருந்து ஒரு தொகுதி அணுவாயுதங்கள் ராணுவ விமான தளங்களுக்கு எடுத்துச் செல்லப் படுவதை உளவறியும் செய்மதி படம் பிடித்திருப்பதாக அமெரிக்க உளவறியும் வட்டாரங்களை ஆதாரம் காட்டி லண்டன் சண்டே டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்தியாவும் அணுவாயுதப் போருக்கு தன்னைத் தயார்ப்படுத்துவதுபோல் தென்படுவதாக சோவியத் யூனியன் அமெரிக்க அதிகாரிகளுக்கு அறிவித்திருப்பதாக சண்டே டைம்ஸ் பத்திரிகையின் வாஷிங்டனிலுள்ள பாதுகாப்புத்துறை நிருபர் தெரிவித்துள்ளார்.

உளவுச் செய்மதி வெளியிட்ட தகவல்களை அடுத்து அமெரிக்காவும் சோவியத் யூனியனும் மிகுந்த எச்சரிக்கை அடைந்திருப்பதாக கூறப்படுகிறது. இந்திய உப கண்டத்தில் பேரழிவு ஏற்படும் அபாயம் குறித்து இரு வல்லரசுகளும் அச்சம் கொண்டுள்ளன. (அ-ப)

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் இராசையா

கலட்டியைச் சேர்ந்த பாக்கியம் இராசையா சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை இராசையா (புகையிரத நிலைய அதிபர்), அவர்களின் அருமை மனைவியும், இரா. பாலசிங்கம் (Retd. Engineer, Signals, C.G.R). திருமதி கமலாம்பிகை, திருமதி நீலாம்பிகை, திருமதி நகுலேஸ்வரி, காலஞ்சென்ற திருமதி கௌசலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி மகாலட்சுமி பாலசிங்கம், காலஞ்சென்ற திரு. வி. செல்வநாயகம் (தமிழ்ப் பேராசிரியர்), திரு. க. ரங்கநாதன் (Retd, Dist. Sericulture Ext. Officer), திரு. V. S. ஆதிரை (Lanka Porcelain, Colombo), திரு. V. நடராஜா (Accountant) ஆகியோரின் அன்பு மாமியாரும், பா. பாலகுமார், திருமதி சாந்தினி கைலாயநாதன் (U.K), திருமதி அமிர்தினி ராஜ்குமார் (U.S.A), பா. மகேஸ்வரகுமார் (ராஜன்), பா. விஜயகுமார் (U.K), பா. திருக்குமார், திருமதி சிவசாந்தி நாராயணசுவாமி (Manila), காலஞ்சென்ற செல்வி திலகவதி, செ. குமாரநாயகம் (Engineer, Australia), செ. கனகநாயகம் (Canada), திருமதி பிரேமலா ராஜசுந்தரம் (Australia), திருமதி சாமளா ஜெயராஜா (Canada), திருமதி ஜயமலா (சுட்டா), கமலநாதன் (Canada), திருமதி நிறைஞ்சலா சாந்தகுமார் (U.K) ஆ. நிமலேந்திரா (Accountant U.K), ஆ. ரவீந்திரா (Accountant Mascon's), ஆ. திலகேந்திரா (Canada), ஆ. யோகேந்திரா (Canada), ந. சூரியகுமாரன் (Engineer Australia), காலஞ்சென்ற செல்வி கல்யாணி ஆகியோரின் அருமைப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இல்லத்தில் (பிறவுண் றோட், கலட்டி) 28 - 05 - 1990 திங்கட்கிழமை காலையில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றுத் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணிக்கு கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:

இராசையா, பாலசிங்கம் [மகன்]
கனகசபை ரங்கநாதன் [மருமகன்]
''தொழில் நுட்பக் கல்லூரி முன்றல்',
பிறவுண் றோட்,
கொக்குவில்.

(3659)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org